

# இலக்கு

இதழ் 91

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஆகஸ்ட் 16, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1




அரசியல் ஆய்வாளர் **சூ.யோ. பற்றிமாகரன்**

## உலகத் தமிழினத்தின் பலத்தால் ஈழத்தமிழினத்தின் உரிமைகள் மீட்கப்பட வேண்டும்

## செஞ்சோலைப் படுகொலை நினைவு நாள்





## தேசிய இனங்களை அழிப்பதில் இலங்கையும் இந்தியாவும் கூட்டுச் சேர்ந்துள்ளன

பெ. மணியரசன்



## சீனாவின் நிலை மாற்றமும் இந்தியாவின் தடுமாற்றமும்

வேல் தர்மா



## நலிவடையும் பட்டறைகள் கேள்விக்குறியாகும் எதிர்காலம்

கிருஸ்ணா



பகுதி 02

## நோர்வேயின் பூர்வீகக் குடிகளை அழித்தொழிக்கும் பசுமைக் காலனீயம்

தமிழில் **ஜெயந்திரன்**

## நாடாளுமன்றம் செல்லும்முன் முள்ளிவாய்க்காலுக்கு சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார்

இலங்கையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றம் செல்வதற்கு முன்னதாக பல்லாயிரக்கணக்கான மக்கள் 2009இல் உயிர்நீத்த இடமாகிய முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருக்கின்ற நினைவுத் தூபியில் வியாழக்கிழமை (13) அஞ்சலி செலுத்தினார்.



இந்நிகழ்வில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



இதனிடையே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களும் முள்ளிவாய்க்கால் சென்று அங்கு சிறீலங்கா அரசின் இனப்படுகொலையில் மரணித்தவர்களின் நினைவிடத்தில் தமது அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர்.

## தோல்வியை ஆய்வு செய்ய சுயாதீன குழு - கூட்டமைப்பு

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் திருகோணமலையில் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா, கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம், நிர்வாகச் செயலாளர் குணநாயகம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உருப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சிவஞானம் ஸ்ரீதரன், வடமாகாணசபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், சட்டத்தரணி கே.வி.தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் பின்னராக செய்தியாளர்



களுக்கு கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக விவாதிக்கப்பட்டதாகவும், அனைவருது கருத்துக்களும் கேட்டறியப்பட்டதாகவும் தெரிவித்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சிங்கள பௌத்த நாடாக தன்னை முழுமைப்படுத்திக் கொண்ட சிறீலங்கா

இலங்கையில் இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பெரும் வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ச அரசு தனது அமைச்சர்களின் பதவியேற்பு விழாவை முழுமையான சிங்கள பௌத்த முறையில் கொண்டாடியுள்ளது. அங்கு வாழும் ஏனைய இனங்களை அது புறக்கணித்துள்ளது.



கண்டியில் கடந்த வெள்ளிக்கிழமை (14) இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கட்சி ஆதரவாளர்கள் வைத்திருந்த சிறீலங்காவின் தேசியக் கொடிகளில் சிறுபான்மையினரை குறிக்கும் நிறங்கள் அகற்றப்பட்டிருந்தன.

சிறீலங்காவின் தேசியகீதம் தனிச் சிங்களத்தில் இசைக்கப்பட்டதுடன், தமிழ் முஸ்லீம் மதத் தலைவர்களும்புறக்கணிக்கப்பட்டிருந்தனர். இந்து மற்றும் முஸ்லீம் கலாச்சாரங்களுக்கான அமைச்சு பொறுப்புக்கள் நீக்கப்பட்டுள்ளதுடன், இனநல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சுகளும் நீக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் என்பது சிறீலங்கா

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சுயேட்சைக் குழுக்களை நோக்கி திரும்பும் தமிழ் மக்களின் கவனம்

இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களில் புதிதாக போட்டியிட்ட சுயேட்சைக் குழுக்கள் குறிப்பிடத்தக்க வாக்குகளை பெற்றது அரசியல் அவதானிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஈ.பி.டி.பி என்ற சிறீலங்கா படையினரின் துணை இராணுவக் குழுவில் இருந்து விலகிய சந்திரகுமார் கிளிநொச்சியில் 16,000 வாக்குகளை பெற்றுள்ளார். அவருக்கு கிளிநொச்சியில் வசிக்கும் மலையக வம்சாவளித் தமிழ் மக்களின்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## 19 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படும் சிறீலங்கா நீதி அமைச்சர்

சிறீலங்கா அரச தலைவருக்கு உள்ள அதிகாரங்களை குறைக்கும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவரப் போவதாக சிறீலங்காவின் நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவி த்துள்ளார்.

அடுத்தமாத நடுப்பகுதியில் இதனை முன்வைக்கவுள்ளேன். அமைச்சர்களின் முடிவின் பின்னர் அது இறுதி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தேர்தல் வெற்றிக்காக முகநூலுக்கு பணத்தை வாரி இறைத்த அங்கஜன்

இலங்கையில் நடைபெற்று முடிந்த தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்டு யாழ். மாவட்டத்தில் வெற்றி பெற்ற அங்கஜன் இராமநாதன் தனது வெற்றிக்காக முகநூல் நிறுவனத்திற்கு மட்டும் 10,000 அமெரிக்க டொலர்களை செலவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தேர்தலில் அதிக செலவுகளை மேற்கொண்ட 10 நபர்களில் இவரும் ஒருவர்.

## சிறீலங்காவின் வெளிநாட்டு கையிருப்பில் பாரிய வீழ்ச்சி

சிறீலங்காவின் பொருளாதாரம் கடுமையான பாதிப்புக்களை சந்தித்து வருகின்றது. கொரோனா வைரசின் தாக்கம் ஒரு புறம் இருந்தாலும் தற்போதைய அரசின் நடவடிக்கைகள் அதன் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

கடந்த ஆண்டின் இறுதியில் 7.5 பில்லியன் டொலர்களாக இருந்த சிறீலங்காவின் கையிருப்பு, கடந்த ஜுன் மாதம் 6.5 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளது. எனினும் கடனுக்கான மீள் செலுத்தும் தொகைகள் அதிகம் உள்ளதால், மேலும் 1 பில்லியன் டொலர்கள் நிதி இழக்கப்படும் சாத்தியங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலமை சிறீலங்காவின் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகம் குறைப்பதுடன், எதிர்வரும் 2021ஆம் ஆண்டுக்கான கடன் மீள் செலுத்தும் தொகையான 4 பில்லியன் டொலர்களை சிறீலங்கா அரசின் கையிருப்பு எட்ட வேண்டும். எனவே சிறீலங்கா அரசு அதற்காக அனைத்துலக நாடுகளிடம் இருந்து அதிக கடன்களை பெறும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

## பொதுத் தேர்தல் – முகநூல் செலவு 591,000 டொலர்கள்

இலங்கையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது முகநூலில் விளம்பரப்படுத்தப்பட்ட 33000 விளம்பரங்களுக்கு 591,000 டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்த தொகையில் மேற்கு மாகாணத்தில் மட்டும் 255,000 டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. அதற்கு அடுத்ததாக மத்திய மாகாணத்தில் 48,000 டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

## பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முற்றாக அழிக்கத் திட்டம்


இலங்கை - இந்திய உடன்பாட்டில் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பல அதிகாரங்கள் அகற்றப்படவுள்ளதாக புதிய சிங்கள பௌத்த அரசின் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளுக்கான அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பிரித்தானியா நிறுவனத்திற்கு எதிராக போர்க்குற்ற வழக்கு

*சிறீலங்கா படையினருடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக பிரித்தானிய நிறுவனம் ஒன்று மேற்கொண்ட போர்க்குற்றங்களுக்கு எதிராக பித்தானிய காவல்துறையினர் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.*

*நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் காவல்துறையினரின் போர்க் குற்ற விசாரணைப் பிரிவினர் 1980 களில் மேற்கொள்ளப்பட்ட இந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பிரித்தானியாவின் உள்விவகார அமைச்சகம், கூலிப்படையினர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுவுக்கு தெரிவித்துள்ளது.*



*பிரித்தானியாவின் இந்த கூலிப்படையினர், சிறீலங்கா படையினருடன் இணைந்து தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலைகளை பிரித்தானியாவின் த மோர்னிங் ஸ்ரார் என்ற ஊடகத்தின் ஊடகவியலாளர் பிலிப் மில்லர் நூல் வடிவில் வெளிக்கொண்டு வந்திருந்தார்.*

*பிரித்தானியாவின் முன்னாள் படைவீரர்கள் 'கினி மினி' என்ற அமைப்பின் மூலம் சிறீலங்காவுக்கு சென்று, சிறீலங்கா படையினருக்கு பயிற்சிகளை வழங்கியதுடன், தாக்குதல்களில் நேரிடையாகவும் பங்கு பற்றியிருந்தனர்.*

*சிறீலங்காவுக்கு தனிப்பட்ட வகையில் தனியார் நிறுவனங்கள் ஊடாக உதவிகளை வழங்கலாம் என பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் மாக்கிரட் தட்சருக்கு அவரின் சிறப்பு ஆலோசகர் ஆலோசனை வழங்கியிருந்தார். அதன் பின்னரே 'கினி மினி' அமைப்பு அங்கு சென்றிருந்தது.*

*இந்த அமைப்பே சிறீலங்காவின் சிறப்பு அதிரடிப்படையினரை உருவாக்கியது. அவர்கள் தான் மிக அதிகளவான போர்க்குற்றங்கள் மற்றும் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள். 1987 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண இறால் பண்ணையில் சிறீலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட இனப்படுகொலையில் 85 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.*

*இந்த அமைப்பு பிரித்தானியாவின் விமான ஓட்டிகளையும் வாடகைக்கு அமர்த்தி சிறீலங்கா படையினருக்கு உதவிகளை வழங்கியிருந்தது. 1985 ஆம் ஆண்டு பிரித்தானிய வான்படையினருடன் சிறீலங்கா படையினர் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் 16 தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.*

*பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட தமிழர் தகவல் மையம் இந்த தகவல்களை சேகரித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுவுக்கு வழங்கியிருந்தது.*

*பிரித்தானிய காவல்துறையினர் விசாரணை களை ஆரம்பித்துள்ளது வரவேற்கத்தக்கது. இது தொடர்பில் பிரித்தானியாவின் அக்கறையின்மை மீது கேள்விகளை எழுப்புவதற்கு ஐ.நாவுக்கு அதிகாரமுள்ளது. இந்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் பல தசாப்தங்களாக நீதிக்காக காத்திருக்கின்றனர் என தமிழர் தகவல் மையம் சார்பில் ஐ.நாவுக்கு தகவல்களை வழங்கி நடவடிக்கையை மேற்கொண்டுவரும் குற்றவியல் வழக்கறிஞர் கலாநிதி றசேல் சியோகி தெரிவித்துள்ளார்.*

*1980 களில் 'கினி மினி' அமைப்பை நிர்வகித்த டேவிட் வோக்கருக்கு (78) இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அவர்கள் அதற்கு பதில் அளிக்கவில்லை.*

*வோக்கர் தற்போது சறே பகுதியில் கொன் சவேற்றிவ் கட்சியின் நகரசபை தலைவராக உள்ளார். நிக்கிரகுவாவில் இடம்பெற்ற போரின் போதும் இந்த அமைப்பு வைத்தியசலைகள் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் அமெரிக்காவின் விசாரணைக்கும் வோக்கர் ஒத்துழைக்க மறுத்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

இலக்கு

# மாறுநிலை அரசியல் முடிவடைந்தது புதிய களம் திறக்கப்பட்டுள்ளது

**உலக வரலாற்றில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புத் தினம் எனச் சுட்டப்பட்டுள்ள *18.05.2009* முதல் *05.08.2020* வரையான காலம் இலங்கைத் தீவில் நல்லெண்ணம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தல், வழி மாறுநிலை அரசியல் ஒன்றைத் தோற்றுவிக்க உலக நாடுகளும் உலக அமைப்புக்களும் பலவழிகளில் முயன்ற காலமாக வரலாறு பெறுகிறது. ஆனால் *05.08.2020* இல் நடாத்தப்பட்ட இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழின அழிப்பைச் சிறீலங்காவின் படைகளைக் கொண்டு செய்வித்த ராஜபக்ச குடும்பத்தினர் மீளவும் சிறீலங்காப் பாராளுமன்றத்தில், அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கான முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைப் பெற்றதும் இந்தக் காலம் முடிவடைந்துள்ளது. தங்களது தமிழின அழிப்பின் நோக்கமான சிங்களவரின் நாடு இலங்கை, சிங்கள இனம் ஒன்றுக்கே இலங்கை உரியது, பௌத்த மதம் மட்டுமே இலங்கையின் மதம் என்னும் ஜனநாயகத்திற்கு எதிரான இனவெறி, மதவெறிச் சிங்கள பௌத்த பேரினவாத தத்துவத்தை சிறீலங்காவின் அரசின் கொள்கையாகச் செயற்படுத்தத் தொடங்கி விட்டதால், மாறுநிலை அரசியல் காலம் இலங்கையில் முடிவடைந்து விட்டதை உலகம் உணருகிறது.**

**அதே வேளை *1970*ஆம் ஆண்டுத் தேர்தலை அடுத்து கூட்டணி மூலம் கிடைத்த பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பதைப் பயன்படுத்தி சிறீலங்கா சுதந்திரக் கட்சி குடியரசாக்குதல் என்னும் அரசியற் களத்தைத் திறந்து, தமிழர்களுக்கு அவர்களுடைய இறைமையைச் சிங்களவரின் இறைமையுடன் பகிர்ந்து, ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சியில் இணைகையில் தமது இன மத உரிமைகளைப் பேணி வாழ்வதற்கான சோல்பரி அரசியலமைப்பின் *29(2)* உத்தரவாதத்தை வன்முறைப்படுத்தி ஈழத்தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே நாடற்ற தேசஇனமாக்கிப் படைபலம் கொண்டு அவர்களை ஆளத் தொடங்கியதன் வழி ஈழத்தமிழர்களுக்கு *22.05.1972* முதல் *18.05. 2009* வரை தமது மண்மீட்புக்கான *37* ஆண்டு கால போராட்டக் களத்தைத் திறந்து வைத்தது. *2020* இல் ஐம்பது ஆண்டுகளின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பரிணாம வடிவான சிறீலங்கா பொதுஜன பெரமுனை தான் பெற்றுள்ள பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு அரசியல் அதிகாரப் பகிர்வு கிடையாது என்பது மட்டுமல்லாமல், ஒரு இன ஒரு நாட்டுத் தத்துவம் பேசி ஈழத்தமிழர்களுக்கு அவர்களது சமூக இருப்பை உறுதிப்படுத்துவதற்கான போராட்டக் களம் ஒன்றைப் புதிதாகத் திறந்துள்ளது.**

**இனஅழிப்பால் ஈழத்தமிழர்களின் உயிர், உடைமை, நாளாந்த வாழ்வுக்கு இனம் காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்திய சிறீலங்கா, தற்பொழுது ஒரு இனம் ஒரு நாடு என்னும் கலாச்சார இனஅழிப்பால், வரலாற்றுத் திரிபுவாதத்தால் ஈழத்தமிழர்களின் தேசஇனம் என்னும் அடையாளத்தையே துடைத்தெறிந்து அவர்களை நிரந்தர அடிமைகளாக்கும் பேரினவாத அரசியலை வேகத்துடன் ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் வாழ்வுக்காகப் போராடும் நலிவுற்ற மக்களாக அதீத மனிதாய உதவிகளுக்குரிய மக்களாக உள்ள ஈழத்தமிழர்களுக்குப் பலமும், வளமும் அளிக்கும் மூலங்களாக புலம்பெயர் தமிழர்களே உள்ளனர். புலத்தைப் பலப்படுத்தி நிலத்தை மீள்விக்கும் பெரும் பயணம் ஒன்றை புலத்துத் தமிழர்கள் உலகெங்கும் உள்ள உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்து உடன் தொடங்கல் அவசியமாகிறது. அந்தக் களத்தின் அடிப்படையில் பிரிந்து நிற்கும் இன்றைய நிலையை இந்தக் களத்தை முன்னெடுப்பதற்காக ஈழத்தமிழர்களும் உலகத் தமிழர்களும் மாற்றியமைத்து ஒரணியில் பேரணியாக இணைதல் வேண்டும்.**

**தாயகத்திலும் இனம் என்று ஒன்று இல்லை என்னும் இன்றைய ஆட்சியாளரின் போக்கால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லீம்கள் என்னும் முந்நிலைப்பட்ட தமிழ் பேசும் மக்களையும் பொது வேலைத்திட்டமொன்றில் அவரவர்களின் வேறுபாடுகளை மதித்து தமிழ் பேசும் மக்களாக இணைந்தெழச் செய்தல் வேண்டும். இதற்கு மீண்டும் அர்ப்பணிப்புடன் கூடிய பணிசெய் மக்களாகப் புலத்துத் தமிழர் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். மாறுநிலை அரசியலையும், சமூக நீதியையும், சட்டத்தின் ஆட்சியையும் கூடத் தர மறுத்துவிட்ட சிறீலங்காவை உலகுக்குத் தெளிவாக இனங்காட்டும் அரசியல் உரையாடல்களைத் தொடங்கி, சிறீலங்காவின் இந்தச் செயல்கள் ஈழத் தமிழர்களுக்கு உதவ முற்பட்ட இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், கனடா போன்ற பல உலக நாடுகளுக்கும், உலக அமைப்புக்களுக்கும் சிறீலங்கா எதிர்வினையாக உள்ளது என்பதையும் எடுத்துரைத்து, சிறீலங்காவின் செயற்பாடு களை அனைத்துலகச் சட்டங்கள் வழமைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்த அழுத்தங்களை உடன் பிரயோகிக்குமாறு உறுதியுடன் எடுத்துரைக்க வேண்டும். இவற்றுக்கான முயற்சிகளைத் திட்டமிடவும் செயற்படுத்தவும் தாயகத்துடனும், உலகுடனும் இலக்கும் ஈழத்தமிழர் உரிமை மையமும் இணையும் என்பதையும் உறுதியுடன் எடுத்துச் சொல்வதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.**

**– ஆசிரியர்**

## “கருகிய மலர்களுக்கு உருகிய உள்ளத்துடன் அஞ்சலி செய்கின்றோம்.”



நிசப்தத்தின் நரம்புகளில் - நின்
நினைவுகளை
மீட்ட நினைக்கின்றோம். - அங்கே ......
விழிமடல் நீர்மழை சொரிந்திட
விம்மியழுகின்றது இதயம்.- அதில் அழியாத
உம் முகங்கள்
அரங்கேறுகிறது - ஆத்மாவின்
மொழியில்லாக்
காவியமாய்.
காலங்கள் பலவாக கட்டிக்காத்திட்ட கல்விக்
கனவுகள் எல்லாம் கணப்பொழுதினில்
கரைந்து போக கண்முன்னே கசங்கிப்
போயினர் காகிதப்பூக்களாய்.
வல்லூறுகளின் வான்வீச்சிற்கு இரையாகி -
இம் மண்ணிற்கு உரமாகிய
உங்களின் நினைவுகள்
எங்களின் மனங்களில் உலவும் வரைக்கும்
நிச்சயம் நீங்கள் வாழ்ந்து கொண்டே
இருப்பீர்கள்.

குந்தவை

# செஞ்சோலைப் படுகொலை நினைவு நாள்

## சிறீலங்காவின் தடையை புறக்கணித்த மக்கள்

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு விமானப்படையினரின் தாக்குதலில் உயிரிழந்த 54 மாணவிகள் உள்ளிட்ட 61 பேரின் 14ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு படையினர் மற்றும் காவல்துறையினரின் அச்சுறுத்தலையும் மீறி நினைவு கூரப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை(14) காலை 6.15மணிக்கு விமானத்தாக்குதல் இடம்பெற்ற இடைக்கட்டு செஞ்சோலை வளாகப்பகுதியில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து 6.45 மணிக்கும் உறவினர்கள் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

பின்னர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் உள்ளிட்டவர்களால் அதே இட த்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.



ஆண்டு தோறும் நினைவேந்தல் இடம்பெறும் வள்ளிபுனம் இடைக்கட்டு சந்தியில் அமைக்கப்பட்ட நினைவு வளைவிற்கு அருகில் நினைவேந்தல் நடத்த காவல்துறையினர் தடை விதித்திருந்தனர்.

இருந்தபோதிலும், தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் அந்த இடத்திற்கு சென்றபோது காவல்துறையினர் தடை விதித்துள்ளனர்.



எனினும், வழமைபோல் நிகழ்வு செய்யும் அதே இடத்தில் சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

நினைவேந்தல் இடம்பெற்ற பகுதிகளில் ஆயுதம் தாங்கிய படையினர் காவல்துறையினர் மற்றும் அரச புலனாய்வாளர்கள் பிரசன்னமாகியிருந்ததோடு, அஞ்சலி நிகழ்வினை மேற்கொள்பவர்களை புகைப்படம் எடுத்துள்ளனர்.

இதனிடையே, யாழ். பல்கலைக்கழகத்திலும், செஞ்சோலையில் உயிரிழந்த சொந்தங்களுக்காக உணர்பூர்வமான நினைவு வணக்கம் இடம் பெற்றுள்ளது.

# வீரமுனைப் படுகொலையின் 30வது ஆண்டு நினைவேந்தல்

வீரமுனைப் படுகொலையின் 30வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த புதன் கிழமை (12) மாலை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

படுகொலை நடைபெற்ற வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்டவர்கள் ஞாபகார்த்த தூபியருகே, வீரமுனை கிராம மக்களின் ஏற்பாட்டில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்த நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.



இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் யோ. ரஜனி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

# உலகத் தமிழினத்தின் பலத்தால் ஈழத்தமிழினத்தின் உரிமைகள் மீட்கப்பட வேண்டும்

அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் 2020 குறித்த சிந்தனையில் தெளிவைப் பெறும் நோக்கில் ஜனநாயகத்தின் அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன் அவர்கள் இலங்கையின் சனநாயகத்தின் அரசியல் குறித்து எமக்கு பிரத்தியோகமாக வழங்கிய நேர்காணலை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:**

**ஜனநாயகத்தின் அரசியலில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றவர் என்ற முறையில், நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் இலங்கைத் தீவின் ஜனநாயகத்தின் அரசியலில் என்ன முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன?**

**பதில்:**

2020 இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல், சிறீலங்கா பொதுஜன பெரமுன என்னும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் புதிய எழுச்சிக் கட்சிக்கு, அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து அறுநூற்றி தொண்ணூற்று மூன்று வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளில் 59.09 வீதமான அவ்வாக்குகளுக்கான 145 பாராளுமன்ற உறுப்பினர்களையும் கிடைக்கச் செய்துள்ளது.



225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில், தனது நட்புக் கட்சிகளுடன் இணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள உறுதியான அரசாங்கம் ஒன்றை, மகிந்த ராஜபக்சாவை பிரதமராகக் கொண்ட சிறீலங்காப் பொதுஜன பெரமுனை நிறுவிட இத்தேர்தல் வழிவகுத்துள்ளது. சிறீலங்கா ஜனாதிபதி கோத்தபாய எந்த நோக்கத்திற்காக இத்தேர்தலை நடத்தினாரோ அதில் அவர் வெற்றியும் பெற்று ள்ளார்.

சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்களின் இந்த ஜனநாயக அரசியல், இலங்கையின் தேசிய இனமாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கையில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களை வெறுமனே சமூகம் என வரைவுபடுத்தி, அவர்கள் உலகின் குடிகள் என்ற முறையில் உலகின் இனத்துவச் சிறுபான்மைச் சட்டங்காளால் உள்ளக தன்னாட்சி உரிமையை மறுக்கும் சிறீலங்காவின் ஆட்சியில் இருந்து தங்களைப் பாதுகாக்குமாறு கோரும் அவர்களின் வெளியக தன்னாட்சி உரிமையை மறுக்கும் செயற்பாடுகளை ராஜபக்ச சகோதரர்கள் குடும்ப அரசு எடுப்பதற்கு உதவியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் ஈழத்தமிழர்களின் சமூக இருப்பு, இந்தத் தேர்தல் முடிவால் உடனடி ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது. ஈழத்தமிழர்களின் சமூக இருப்பைப் பாதுகாத்தல் என்னும் அதி முக்கிய பணியினை உடன் செய்யத் தொடங்குங்கள் என்னும் அழைப்பைப் புலம்பெயர் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் இத்தேர்தல் முடிவுகள் விடுத்துள்ளன. இந்த அழைப்பை உலகத் தமிழினம் செயற்படுத்துவதன் மூலம் ஈழத் தமிழினத்தின் சமூக இருப்பு மட்டுமல்ல அனைத்து உரிமைகளும் மீட்கப்ப டும் என்பதை ஈழத் தமிழர்கள் ஏற்று தேசங் கடந்துறை மக்களாக உலகின் சக்தி படைத்த நாடுகளின் ஆற்றலுள்ள குடிகளாக உள்ள உலகத்தமிழர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். இதற்கு உதவுவதை இலக்காகக்கொண்டே ஈழத்தமிழர் உரிமைகள் மையமும் அதன் வார இதழான இலக்கு மின்னிதழும் இலக்கு சமுகவலைத் தளமும் செயலாற்றி வருகின்றன.

**கேள்வி:**

**நீங்கள் அரசியல் விஞ்ஞானத்தில் பட்டதாரி என்றவகையில், அரசியல் அதிகாரப்பகிர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை - இனப்பிரச்சினை என்பதே சிறீலங்காவில் இல்லை என்ற சிறீலங்கா அரசின் அறிவிப்பின் பின்னணியில், 2009இல் துப்பாக்கிகள் மௌனித்த பின்னர் சனநாயகத்தின் வழியாக ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளை அடைதல் எனத் தொடங்கியுள்ள, நீண்ட பயணம் எத்தகைய தடைகளைச் சந்திக்க வேண்டி வரும் இவற்றை எவ்விதம் அவர் கள் மேற்கொள்ளலாம் என நீங் கள் கருதுகின்றீர்கள்?**

**பதில்:**

ஒரு இனம், ஒருநாடு, ஒரு மதக் கொள்கை அரசின் கொள்கையாக்கப்படும் போது, ஈழத்தமிழர்களின் தங்களுக்கான அரசினை உருவாக்கல் என்னும் உள்ளக, தன்னாட்சி உரிமை இழப்பு உலகுக்குத் தெளிவாக உணர்த்தப்படும். இதுவே ஈழத்தமிழர்கள் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கும் தன்மைக்கு அவர்களை இட்டுச் செல்லும். ஆனால் இதனை தாயகத்தில் தெரிவாகியுள்ள தமிழர் பிரதிநிதிகள் சரியான அரசியல் மொழியில் உறுதியுடன் உலகிற்கு எடுத்துரைக்கும் தம் அரசியல் கடமையைச் செய்ய வேண்டும். கடந்த பதினொரு ஆண்டுகளாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்த தவறினை அதாவது சிறீலங்கா அரசின் முகவர்களாக ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை மலினப்படுத்திய வேலையைச் செய்யாமல் இருந்தாலே ஈழத்தமிழர்களின் அரசியல் எதார்த்தத்தை உலகு தெளிவாகக் கண்டு கொள்ளும்.





சிங்களத் தேசியத்திற்கு எவ்வாறு இது எம் நாடு, எம் இனம், எமது ஆட்சி எனச் சொல்வதற்கு உரிமையுள்ளதோ அதனைப் போலவே தமிழீழத் தேசியத்திற்கும் உரிமை உண்டு. 1956இல் சிங்களம் தன் மொழியே நாட்டின் அரசகரும மொழி என்ற பொழுதே தமிழர்களும் தமிழே எங்கள் பகுதியின் ஆட்சி மொழி என்றனர். இது மொழி வெறியல்ல எதிர் வினையாற்றல். அவ்வாறே சிங்களம் வடக்கு கிழக்கு உங்கள் இடம் போங்கள் என்று தமிழர்களை இனஅழிப்புச் செய்து விரட்டி அடித்த பொழுதே இது எங்கள் சொந்த மண் தமிழீழம் என்றனர் தமிழர்கள்.

இது பிரிவினையல்ல, ஈழத்தமிழர்களின் தேச மீள் உருவாக்கம். அவ்வாறே இன்றைய அரசு ஈழத்தமிழர்களை இனம் அல்ல சமுதாயம் என்கிற பொழுது ஈழத்தமிழர்கள் நாம் சிறீலங்காவின் மக்களல்ல நாடற்ற தேசஇனம் எங்கள் தாயகத்தில் எங்களை தன்மானத்துடன் வாழவிடுங்கள் எனத் தங்களின் அரசியல் உரிமைகளை சனநாயகத்தின் வழியில் மீட்டெடுக்கும் நீண்ட பயணத்தை விரைவில் அடைய முடியும்.

**கேள்வி:**

**அனைத்துலக மன்றத்தின் ஆணையகம் வெறும் பேச்சு மேடையே, அதனைப் பற்றி எமக்குக் கவலையில்லை பாதுகாப்புச் சபையே பலமானது என இன்றைய நீதி அமைச்சர் பகிரங்கமாகக் கூறியுள்ள நிலையில் தமிழர்களின் அரசியல் உரிமைகளை அவர்கள் அடைய உலக நாடுகள் மற்றும் உலக அமைப்புக்கள் உதவுவதற்கு உலகத்தமிழர்கள் என்ன வழிகளில் அழுத்தங்களைப் பயன்படுத்தலாம்?**

**பதில்:**

மக்களின் நலனில் அக்கறை காட்டாது படைபல வல்லாண்மையால் மக்களை அடக்கி ஆளுபவர்கள் உலக மன்றங்களையோ அவற்றின் செயற்பாட்டு முறைமைகளையோ அலட்சியம் செய்து உலக வல்லாண்மைகளின் மேலாண்மைகளின் உறவால் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைப்பர் என்பதற்கு நீதி அமைச்சரின் உரை சான்று.

இது ஒரு பதவிசார் அதிகாரக் கூட்டு றவு. பதவிசார் அதிகாரங்கள் என்றுமே நிலைத்ததில்லை. எனவே உலக மன்றத்தின் மனித உரிமை ஆணையகத்துக்கு தமிழர்கள் தொடர்ந்து தங்கள் உண்மை நிலைகளை எடுத்துரைப்பது அவசியம். உலக மன்றத்தின் மனித உரிமைகள் ஆணை யகம், பொதுச்சபைக்கு ஒரு தீர்மானத்தை வாக்கெடுப்புக்குக் கொண்டு சென்றால், அதனைப் பாதுகாப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# நலிவடையும் பட்டறைகள் ;
# கேள்விக்குறியாகும் எதிர்காலம்




தமிழர்களின் பூர்வீக தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் பல்வேறு தொழில்களை காலங்காலமாக புரிந்து வருகின்றனர். விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, வணிகம் என்பவற்றுக்கு அப்பால் பல்வேறுபட்ட கைத்தொழிகளிலும் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இனஅடக்குமுறை கூர்மையடைவதற்கு முன்னானகாலப்பகுதியில் தமிழரின் பொருண்மிய நிலைமை ஒரு செழிப்பான நிலையில் காணப்பட்டதென்றே கூறலாம்.

சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் தமிழர்களின் பொருண்மியம் பறிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும்வந்ததே வரலாறாக உள்ளது. இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக தமிழரின் பொருண்மிய பலத்தை அழிக்கும் நடவடிக்கைகளும் சிங்கள அரசுகளால் நன்கு திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டே வந்துள்ளன. இந்த நிலை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த வகையில், தமிழ் மக்கள் செய்து வந்த பல தொழில்கள் மிக மோசமாக நலிவடைந்து காணப்படுகின்றன. பல அழிவின் விளிம்பில் நிற்கின்றன. இவ்வாறான தொழில்களில் ஒன்றுதான் தங்கநகை வடிவமைப்பு.

தமிழர்களில் பொற்கொல்லர் எனப்படும் தொழில் ரீதியான சமூக அமைப்பொன்று தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில் நிலைபெற்று வாழ்ந்து வருகிறது.

பொற்கொல்லர்கள் எமது தாயக பகுதிகளில் மட்டுமன்றி இலங்கையில் பல பாகங்களிலும் வாழ் ந்து வருகின்றனர். இவர்களில் இந்தியாவை பூர்வீகமாக கொண்டவர்களும் இருக்கின்றனர்.

எனினும் எமது வடகிழக்கு தாயகப் பகுதிகளில் பூர்வீகமாக வாழும் பொற்கொல்லர் சமூகம் தமக்கென தனித்துவமான கிராமங்களை கொண்டிருப்பது ஒரு சிறப்பாகும்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தனித்துவமான அடையாளமாக 'விஸ்வகர்ம மக்கள்' என வரலாற்று ரீதியாக அழைக்கப்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகல்லாறு, ஓந்தாச்சிமடம், பெரியபோரதீவு, முனைத்தீவு, மட்டக்களப்பு -கோட்டைமுனை, ஏறாவூர், சித்தாண்டி போன்ற பகுதிகளில் வாழும் இந்த விஸ்வகுல மக்களின் வாழ்க்கையும் மக்களின் அடையாளமும் இன்று பல சவால்களை எதிர்நோக்கி நிற்கிறது.

இப்பகுதிகளை சேர்ந்த 4000 குடும்பங்கள் இந்த தொழிலையே செய்து வருகின்றன. பட்டறை என்னும் தொழில் நிலையங்களை வீடுகளில் அமைத்து வீடுகளில் வீடுகளில் இருந்தவாறே நகை வடிவமைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பரம்பரையாக தமது தொழிலை மேற்கொண்டு வரும் இவர்கள், இன்று தொழிலை மட்டுமன்றி தமது அடையாளங்களையும் இழக்கும் நிலையேற்பட்டுள்ளது.

இராவணன் காலத்தில் இருந்தே இந்த




நாட்டில் வேரூன்றியவர்களாக இந்த விஸ்வகுல மக்கள் இருந்து வருகின்றனர். 'பஞ்சகம்மாளர்கள்' என்றும் கூறப்படுபவர்களின் வாழ்க்கையென்பது

கிருஸ்ணா

அதளபாதாளத்தில் நிற்பதையும் காணமுடிகின்றது. ஓரளவு வசதி படைத்தவர்கள் தமது பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வழங்கி சமூகத்தில் வேறு அடையாளங்களை பெற்றுச் சென்ற நிலையில், மிகவும் கஸ்டமான நிலையில் தமது பரம்பரை தொழிலையே மேற்கொண்டு வந்தவர்கள் இன்று அந்த தொழிலில் ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்கள் காரணமாக தமது வாழ்வு கேள்விக்குறியாகி நிற்பதை காண்கிறார்கள்.

தமது எதிர்காலமே நகைத் தொழில் என்றிருந்த குடும்பங்கள், கல்வி நடவடிக்கைகளில் நாட்டம் காட்டாமல் பரம்பரைத் தொழில் ரீதியான நாட்டம் இருந்ததனால் இன்று பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.



இன்று நகை உற்பத்தி நவீன இயந்திரங்கள் ஊடாகவும் வெளிநாட்டில் இருந்து வகைவகையாக இறக்குமதி செய்யப்படுவதன் ஊடாகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதன் காரணமாக காலங்காலமாக பாரம்பரியமாக நகை உற்பத்தியில் ஈடுபடும் மக்களின் வாழ்கை கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கையினை பொறுத்தவரையில் இலங்கை இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக நவீன நகை வடிவமைப்பு மற்றும் நவீன தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிலையங்கள் சிங்களவர்கள் வாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டு சிங்கள மக்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால் பாரம்பரியமாக இந்த தொழிலைச் செய்துவரும் மக்கள் அதிகளவாக உள்ள வடகிழக்கு பகுதிகள் முற்றாக புறக்கணிக்கப்படுகின்றன.

உண்மையிலேயே கடந்த கால போரில் இவர்கள் இழந்தவை ஏராளம். பொருண்மிய ரீதியில் மட்டுமன்றி போரின் காரணமாக பல்வேறு பாதிப்புகளையும் எதிர்கொண்ட மக்களாக இவர்கள் உள்ளனர்.

வடகிழக்கில் பொற்தொழிலாளர்கள் காலங்காலமாக பரம்பரையாக இந்த தொழிலை செய்து வருகின்றார்கள் என்பது வெளிப்படையானதாக உள்ள போதிலும், இப்பகுதிகளில் தொ ழில்நுட்ப கல்லூரிகளில் கூட அதற்கான பயிற்சி திட்டங்களை முன்னெடுக்கப்படாமை மிகவும் வருத்தத்திற்குரியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொற் கொல்லர்கள் இன்று தமது தொழில்களை இழந்து கூலி வேலைகளுக்கு செல்லும் நிலையேற்பட்டுள்ளது. இந்த நகைத்தொழில் தொடர்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு நவீன இயந்திரங்கள் கொண்டு நகைகளை வடிவமைக்கும் தொழிற்சாலைகளை இப்பகுதிகளில் நிறுவ இந்த இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் நடவடிக்கையெடுத்திருந்தால், இவ்வாறானதொரு நிலை ஏற்படுவதை தவிர்த்திருக்க முடியும்.

இன்று இந்த பொற்கொல்லர்கள் தொழில் இல்லாமல் அவர்களும் அவர்களினால் பயிற்சி பெற்றவர்களும் இன்று நிர்க்கதியான நிலையில் உள்ளதை காணமுடிகின்றது. இவர்கள் தொடர்பில் யாரும் சிந்திக்கும் நிலையில் இல்லை. இதனை விட்டால் வேறு வேலைகளை தேடிச்சென்று பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் நிர்க்கதியாகியுள்ள சமூகமாக இந்த சமூகம் காணப்படு கின்றது.

இந்த சமூகத்தினுடைய பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த தமிழர் சமூகம் தீர்க்கமான செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வர வேண்டும்.

• • •

## வீரமுனைப் படுகொ ... தொடர்ச்சி...

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்கள் ஞாபகார்த்த தூபியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் நினை வேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

12.08.1990 வீரமுனை அகதி முகாமில் புகுந்த முஸ்லீம் குழு வாள்களால் வெட்டி தாக்குதல் நடத்தியது. இதில் ஆலய பரிபாலனசபை தலைவர் தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 97 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

வீரமுனையில் 600 வீடுகளும், சம்மாந்துறை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி கணபதிபுரம், மல்வத்தை ஆகிய கிராமங்களில் இருந்த 1352 தமிழர்களின் வீடுகளும் முஸ்லீம்களால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டது.

# தேசியப் பட்டியலில் வெடித்த பூகம்பம்

# பின்னணியில் நடந்த அரசியல் நகர்வுகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உருவாகிய தேசியப்பட்டியல் பிரச்சினைக்கு சனிக்கிழமை திருமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டத்தில் சுமுகமான தீர்வு காணப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. "கலையரசன் நியமனத்தில் எந்த மாற்றமும் இல்லை" என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அறிவித்து விட்டார்ஆனால், இது நிரந்தரமான 'அமைதியா' அல்லது 'தற்காலிகமானதா' என்பது தெரியவில்லை. ஏனெனில் எதிர் வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் இது தொடர்பில் மீண் டும் ஆராயப்படவிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த ஒரே ஒரு தேசியப்பட்டியல் எம்.பி. பதவிக்கு அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட தவராசா கலையரசன் நியமிக்கப்பட்டுள்ளமை கட்சிக்குள் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியிருந்தது. பிரச்சினை கலையரசனுக்குக் கொடுத்ததால் ஏற்படவில்லை. தன்னிச்சையாக எவ்வாறு இவ்வாறான ஒரு நியமனத்தை தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம்வழங்க முடியும்? என்பது தான் பிரச்சினைக்குக் காரணம். வழமை போல சம்பந்தனும், சுமந்திரனும் எடுத்த முடிவை அவசரமாக நடை முறைப் படுத்தியிருக்கின்றார் துரைராஜசிங்கம்!

இது குறித்து தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராஜாவுக்குத் தெரியப்படுத்தவில்லை. பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசிக்கப்படவில்லை. இதனால் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கொதித்துப்போயிருக்கின்றார்கள். கலை யரசனுக்கு நியமனம் வழங்கப்பட்டமை சரியா? தவறா? என்பதைவிட, அது வழங்கப்படுவதற்குக் கையாளப்பட்ட முறை ஜனநாயக ரீதியானதா என்பதுதான் எழுப்பப்பட்ட கேள்வி. இந்த நெருக்கடி உச்சக் கட்டத்தில் இருந்த போது தான் அவசரமாக அரசியல் குழுவின் கூட்டம் திருமலையில் கூட்டப்பட்டது. கட்சிக்குள் பிளவும், திருமலை கூட்டத்தில் பூகம்பமும் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மருத்துவர்கள் சிலர் முன்னெடுத்த முயற்சியால் யாழ். நகரில் மாவையும், சுமந்திரனும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து உருவாகியிருந்த நெருக்கடி ஓரளவுக்குத் தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

### இரகசிய அரசியல் நகர்வுகள்



கூட்டமைப்புக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில்தான் தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்கின்றது. அதனால், அதன் பங்காளிக் கட்சிகளின் கருத்துக்களையும் பெற்றுத்தான் அதற்கு யாரை நியமிப்பது என்பது தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். கூட்டமைப்புக்கென ஒருங்கிணைப்புக் குழு ஒன்று இருக்கின்றது. தமிழரசுக் கட்சிக்கு மத்திய குழு ஒன்றிருக்கின்றது. முக்கியமான அரசியல் தீர்மானங்கள் அவற்றின் மூலமாகத்தான் முன்னெடுக்கப்பட வேண்டும். தேசியப் பட்டியல் விவகாரத்துக்கும் இதன் மூலமாகவே முடிவெடுக்கப்படும் என கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகளில் மாவை சொ ன்ன செய்தி வெளியாகியிருந்த போது, பட்டியலை கலையரசனுக்குக் கொடுப்பதென்ற முடிவு திருமலை சம்பந்தன் இல்லத்தில் சுமந்திரன், துரைராஜசிங்கம் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தது.



தமிழரசுக் கட்சிக்குள் தலைமைத்துப் போட்டி ஒன்று உருவாகியிருந்தமை தேர்தல் பரப்புரைகள் இடம்பெற்ற காலத்திலேயே வெளிப்படையாகத் தெரிந்தது. அந்தப் பின்னணியில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் ஆகியோர் தேர்தலில் படுதோல்வியடைந்திருந்தனர். தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்படுபவர்களை தேசியப்பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் ஜனநாயகத்துக்கு முரணான 'வழமை' தமிழரசுக் கட்சியில் 1989 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருக்கின்றது. இப்போதும் அதே போன்ற ஒரு முயற்சி நடை பெற்றுக் கொண்டிருந்த போதுதான், தலைவர் மாவை உள்ளே வருவதை விரும்பாத சுமந்திரன் அவசரமாக காய்களை நகர்த்தி கலையரசனை தேசியப்பட்டியல் எம்.பி.யாக்கியிருக்கின்றார்.

**அகிலன்**

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் எவரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாத நிலையில், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை தேசியப்பட்டியல் மூலமாக நியமிப்பது நியாயமானதும், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதும்தான். ஆனால், இரவோடிரவாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கடிதத்தை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைத்தவர்களுடைய நோக்கம் அதுவாக இருக்கவில்லை. கட்சித் தலைவர் நாடாளுமன்றத்துக்கு வருவதைத் தடுப்பதுதான் அவர்களுடைய நோக்கம் என்பது வெளிப்படை. ஞாயிற்றுக்கிழமை காலை அவசரமாக கடிதம் தயாரிக்கப்பட்டு, உடனடியாகவே தேர்தல் ஆணைக் குழுவுக்கு அது அனுப்பப்பட்டது. கடிதம் அனுப்பப்பட்ட பின்னர்தான் ஊடகவியலாளர்களைக் கூட்டி செய்தியை அறிவித்தார் துரைராஜசிங்கம்.

### யாழில் அவசர கூட்டம்

மட்டக்களப்பில் துரைராஜசிங்கம் ஊடகவியலாளர்களைச் சந்தித்து இது குறித்து அறிவித்துக் கொண்டிருந்த போது, யாழ்ப்பா ணத்தில் மற்றொரு நகர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. யாழ் நகரில் ஞாயிற்றுக்கிழமை காலை தமிழரசுக் கட்சியின் யாழ். கிளை மார்டின் வீதியில் அவசரமாகக் கூடி "மாவையைத் தேசியப்பட்டியல் எம்.பி. ஆக நியமிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை எடுத்தது. அந்தத் தீர்மானத்துடன் முக்கிய பிரமுகர்கள் குழு ஒன்று திருமலை புறப்படவும் தயாரானது. அந்த நேரத்தில்தான் துரைராஜசிங்கத்தின் அறிவிப்பு குறித்த செய்தி வெளிவந்தது. சீற்றமடைந்த மாவை, துரைராஜசிங்கத்துக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, கடிதம் அனுப்பப்பட்டு விட்டது என்ற செய்திதான் அவருக்குச் சொல்லப்பட்டது. "பஸ் போன பின்னர் கைகளைக் காட்டி மறிக்க முடியாது" என்ற நிலை மாவைக்கு.

தேசிப்பட்டியலுக்கான பெயர்களை அறிவிப்பதற்கு வெள்ளிக்கிழமை வரை கால அவகாசம் இருந்தும் கூட, திங்கட்கிழமை வெளிவரவிருந்த அதிவிஷேட வர்த்தமானியில் இட ம் பெறத்தக்க வகையில் கடிதம் அவசரமாக ஞாயிறு காலையிலேயே அனுப்பப்பட்டது. கலையரசனின் பெயர் திங்கட்கிழமை வெளியான வர்த்தமானியில் இடம்பெற்றுவிட்ட நிலையில், அதில் மாற்றம் எதனையும் செய்ய முடியாத நிலை மாவைக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும். தனக்கு எதிராக திட்டமிட்ட முறையில் - இரகசியமாகக் சுமந்திரன் காய் நகர்த்தியிருக்கின்றார் என்பது மாவைக்குப் புரிந்தது. இதற்கு சம்பந்தனும், துரைராஜசிங்கமும் உதவியிருக்கின்றார்கள் என்பதும் அவருக்குத் தெரிந்தது. கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரங்களை மாவைக்கு எதிரான இந்த சதிக்கு அவர் பயன்படுத்தியிருக்கின்றார்.

### மவையின் அடுத்த நகர்வு என்ன?

கலையரசனுக்கு தேசியப்பட்டியல் வழங்கப்பட்டது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். ஆனால், கட்சித் தலைவரைப் பலவீனப்படுத்துவதற்காக இவ்வளவு அவசரமாகவும், இரகசியமாகவும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் உட்கட்சி ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்குகின்றது. மக்கள் மத்தியில் நம்பீக்கையீனத்தை ஏற்படுத்துகின்றது. இந்த நிலைமைக்கு சுமந்திரன் மட்டும் காரணமல்ல. சுமந்திரனை இந்தளவுக்கு வளரவிட்ட மாவையும்காரணம். புளொட், ரெலோஆகிய பங்காளிக் கட்சிகளின் இயலாமையும் காரணம். கூட்டமைப்பு என்ற குடை இல்லாவிட்டால் தம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற அச்சம் இந்தப் பங்காளிக் கட்சி களுக்குள்ளது. அதனால், அவ்வப்போது வாய் வீரம் பேசினாலும் பின்னர் அடங்கி விடுவார்கள்.



சுமந்திரனைப் பொறுத்தவரையில் அவர் நினைத்ததைச் சாதித்து விட்டார். மாவை நாடாளுமன்றம் வருவதைத் தடுத்து விட்டார். அதனை இனிமேல் மாற்ற முடியாது. இந்த நிலையில் உருவாகியிருக்கும் கொதி நிலைலை தணிப்பதற்காகத்தான் யாழ். நகரில் மாவையுடன் அவர் சமரசத்துக்குப் போனார். தன்னுடைய இலக்கை அடைந்த பின்னர் சமரசத்துக்குப் போவதாகக் காட்டிக் கொள்வது அவருக்குப் பாதகமானதல்ல. வரப்போகும் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நீங்கள் இறங்குங்கள் எனவும் அவர் மாவையை மேலும் சமாதானப்படுத்த முயன்றதாகவும் தெரிகின்றது. ஆனால், அதற்கு சுமந்திரனே புதிய தடைகளைப் போட்டு இளம் தலை முறையில் ஒருவரை இறக்குவோம் எனச் சொல்லக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

மாவை நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர்களில் முக்கி யமானவர் சி.வி.கே.சிவஞானம். அதற்குக் காரணமும் உள்ளது. மாவை நாடாளுமன்றம் போகாவிட்டால்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

தேர்தலுக்குப் பின்னரான அரசியல் நிலைமைகள் எதிர்பார்த்தவாறே தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையவில்லை. புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆட்சியாளர் களின் தேர்தலுக்கு அடுத்தபடியான நடவடிக்கைகள் இதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றன. இன ஒதுக்கீட்டு நடவடிக்கை என்று கூறத்தக்க வகையிலேயே புதிய அமைச்சரவை உருவாக்கமும், அமைச்சுக்களுக்கான செயலாளர்களின் நியமனமும் அமைந்திருக்கின்றன.

பொதுஜன பெரமுன தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. ஆனால் எதிரணியாகிய ஐக்கிய தேசிய கட்சி பொதுஜன பெரமுனவின் தேர்தல் குறிக்கோளை முறியடிப்பதற்கோ அல்லது அதனைப் பலவீனப் படுத்தவதற்கோ முயற்சிக்கவில்லை. மாறாக தனது உள்வீட்டுப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி, தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளின் தீவிர கவனம் செலுதத் தவறிய நிலையில் குழம்பிக் கிடந்தது.

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து, ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணியை உருவாக்கிய சஜித் பிரேமதாசாவும் சரி, அவருடன் அணி சேர்ந்திருந்த எனைய கட்சித் தலைவர்களும் சரி பொதுஜன பெரமுனவுக்கு நிகராக தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடத் தவறியிருந்தனர் என்றே கூற வேண்டும். இதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கொடாக் கண்டன் போக்கிலான அரசியல் செயற்பாடுகளும் காரணமாக அமைந்திருந்தன.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தின் மூலம் நாட்டில் ஸ்திரமனதோர் அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்சவும், பிரதமர் மகிந்த ராஜபக்சவும் ஏற்கனவே வெளிப்படுத்தி இருந்தனர்.

நல்லாட்சி அரசாங்கம் என்றழைக்கப்பட்ட ரணில் - மைத்திரி கூட்டு அரசாங்கம் பலமிழந்து அரசியல்ரீதியானநலிந்து, நாட்டில்ஸ்திரமற்றதோர் அரசியல் நிலைமையை உருவாக்கி இருந்தது. அந்த கூட்டு அரசாங்கத்தின் செயல் வல்லமையற்ற அரசியல் போக்கே பொதுஜன பெரமுனவின் அரசியல் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தில் வெற்றி பெற்று முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த மகிந்த ராஜபக்ச சர்வாதிகார முறையில் மனம்போன போக்கில் ஆட்சி நடத்திய காரணத்தினாலேயே 2015 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

ஜனநாயகத்தைப் பாதுகாத்து, நல்லாட்சி நடத்தப் போவதாக உறுதியளித்து, உத்தரவாதம் வழங்கி ஆட்சியைப் பிடித்த நல்லாட்சி அரசாங்கம் தனது தேர்தல்கால ஆணையை நிறைவேற்றத் தவறியது. அதன் தலைவர்களாகிய மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் அதிகாரப் போட்டியில் மூழ்கிப் போனதன் காரணமாகவே பொதுஜன பெரமுன என்ற அரசியல் பெயரின் கீழ் ராஜபக்சக்களின் சர்வ அதிகாரப் போக்கிலான ஆட்சி முகிழ்த்துள்ளது.

### விரும்பியவாறு செயற்படுவதற்கான வழி,

பேரின அரசியல் கட்சிகளாகிய ஐக்கிய தேசிய கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் கொள்கை ரீதியாக வேறு வேறு அணிகளாகப் பிரிந்திருந்து மாறி மாறி ஆட்சி நடத்தி வந்த போதிலும், இலங்கையின் ஒற்றை ஆட்சி முறையில் அவர்கள் ஒருமித்த கருத்தையே கொண்டிருந்தார்கள்.

அந்த இரண்டு தேசிய கட்சிகளும் இன்று பலமிழந்து அடையாளம் இழக்கும் நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சியுடன் சமரசம் செய்து கொண்டு ஆட்சி அமைத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியைக் கைவிட்டு, பொது ஜன பெரமுன என்ற புதிய அரசியல் கட்சியை உருவாக்கிய ராஜபக்சக்கள் இன்று நிகரற்ற அரசியல் பலம் கொண்டவர்களாக ஆட்சிபீடத்தைக் கைப்பற்றி இருக்கின்றார்கள்.

**பி.மாணிக்கவாசகம்**

சஜித் பிரேமதாசாவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டுக் கட்சி பொதுஜன பெரமுனவுக்கு எதிராக, எதிர்க்கட்சியாக முளை விட்டிருக்கின்றது. ஆனாலும் பெரும்பான்மை பலத்தையும் அரசியல் ரீதியாகத் திடமான போக்கையும்



வலுவான செயல் வல்லமையையும் கொண்டுள்ள ராஜபக்சக்களின் தலைமையிலான அரசாங்கத்தை வளைத்து நெளிக்கத்தக்க வகையிலானதோர் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயற்படுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

கொழும்பு மற்றும் மலையக சிறுபான்மை அரசியல் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலை எதிர்கொண்டு 47 ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சக்தி 7 தேசிய பட்டியல் ஆசனங்களையும் தனதாக்கிக் கொண்டது. ஆனால் தனது பங்காளிக் கட்சிகளாகிய தமிழ்க் கட்சிகளுடன் இந்தத் தேசிய பட்டியல் உறுப்புரிமையைப் பகிர்ந்து கொள்ள அதன் தலைவர் சஜித் பிரேமதாசா முன்வரவில்லை. இது தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களின் மனங்களில் சோர்வையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்க் கட்சிகள் கூட்டுச் சேராமல் விட்டிருந்தால், ஐக்கிய மக்கள் சக்தி 47 ஆசனங்களைத் தேர்தலில் கைப்பற்றி இருக்க முடியாது என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. ஐக்கிய தேசிய கட்சி என்ற நாட்டின் அரசியல் இமயத்தில் இருந்து பிரிந்த உடனேயே 47 ஆசனங்களை இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தனித்து நின்று வெற்றி கொண்டிருக்க முடியாது. அதற்கு ஏற்ற தேர்தல் கள நிலைமை காணப்படவில்லை. இந்த வெற்றிக்கு தமிழ்க் கட்சிகளே உறுதுணையாக இருந்தன என்பதை மறுக்க முடியாது.

தேர்தலின் பின்னர் அமைச்சரவை உருவாக்கப்பட்டு, பிரதான எதிர்க் கட்சியாகச் செயற்படவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் உறுதியான செயற்பாட்டிற்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எந்த அளவில் ஒத்துழைப்பார்கள் என்று தெரியவில்லை. தேசிய பட்டியல் நியமனத்தில் தாங்கள் ஓரங்கட்டப்பட்டு விட்டோமே என்ற அரசியல் தாக்கம் மிக ஆழமாக அவர்களின் மனங்களில் ஏற்பட்டிருப்பதே இதற் கான காரணம்.

உட்கட்சிப் பூசலைப்போல, ஆழமான ஏமாற்ற உணர்ச்சியுடன் உள்ள பங்காளிக்கட்சிகளின் பூரண ஒத்துழைப்பின்றி ஐக்கிய மக்கள் சக்தி பலமானதோர் எதிர்கட்சியாகச் செயற்பட முடியாது. அதிலும் அதிகார ஆளுமையும் தந்திரோபாய செயல்வல்லமையும் கொண்ட ராஜபக்சக்களுக்கு வலுவுள்ள எதிர்கட்சியாகச் செயற்படுவதற்கு இறுக்கமான கட்டமைப்புடன் கூடிய ஆளுமை மிக்க தலைவரே இன்றைய தேவை. அதனை அரசியலில் மென்மைப் போக்கைக் கொண்டவராகத் தோற்றம் தருகின்ற சஜித் பிரேமதாசாவினால் பூர்த்தி செய்ய முடியுமா என்பது சந்தேகமே.

உறுதியான பலத்துடன் எதிர்த்து மடக்கி நல்வழிப்படுத்துவதற்கான ஆளுமைமிக்கதோர் எதிர்த்தரப்பு இல்லாத ஒரு நிலையில், தமது பெரும்பான்மைப் பலத்துடன் ராஜபக்சக்கள் தாங்கள் விரும்பியவற்றை செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் இந்தத் தேர்தல் வழிசமை த்திருக்கின்றது என்றே கூற வேண்டும்.

### ஆதரவும் ஏமாற்றமும்

அதேவேளை, ஆளுந்தரப்பினராகிய ராஜபக்சக்களை ஆதரிப்பதன் மூலம் நன்மைகளை அடையாளம் என்று எண்ணிச் செயற்பட்ட வடகிழக்கைச் சேர்ந்த பிரமுகர்களும் ஏமாற்றத்திற்கே ஆளாகியிருக்கின்றனர்.

பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவாகவும், அதன் மொட்டுச் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் தாங்கள் எதிர்பார்த்தவாறு தேர்தலின் பின்னர் ஆளுந் தரப்பிடமிருந்து நன்மையைப் பெற முடியவில்லை. தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்ப் பிரதேசங்களில் பொதுஜன பெரமுன காலூன்றுவதற்கு வழியேற்படுத்திக் கொடுத்ததேயல்லாமல், தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு சேவையாற்றத் தக்க வகையில் அரசாங்கத்தில் அதிகார பலத்தைக் கைப்பற்ற முடியாத நிலைமைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மொட்டுச் சின்னத்தில் அல்லாமல், வேறு தேர்தல் சின்னங்களின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலில் வெற்றி ஈட்டித் தந்த அரசியல் பங்காளிகளுக்கும்



ஆளுமையுடன் கூடிய அதிகார பலம் கொண்ட அமைச்சுப் பதவிகள் எதனையும் ராஜபக்ஷக்கள் வழங்கவில்லை. இருந்ததும் தட்டிப்பறிக்கப்பட்ட நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மாத்திரமே அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருக்கின்றது. காலங்காலமாக ராஜபக்சக்களுக்கு ஆதரவாக அவர் அரசியலில் செயற்பட்டு வந்ததன் காரணமாகவே அவருக்கு இந்த அமைச்சுப் பதவி கிடைத்திருக்கின்றது எனக் கருதலாம்.

வடக்கில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடிய அங்கஜனுக்கு ராஜாங்க அமைச்சுப் பதவிகூட வழங்கப்படவில்லை. சுமார் நான்கு தசாப்தங்களுக்கு பின்னர் வடக்கில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை அங்கஜன் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார். பொதுஜன பெரமுனவின்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## எதிர்பார்ப்பும் ஏமாற்ற... தொடர்ச்சி...

மொட்டுச் சின்னத்தைத் தவிர்த்து, அதன் பங்காளிக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அங்கஜனை வேட்பாளராக நிறுத்தி இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டிருந்தது.

சுதந்திரக் கட்சி என்ற முகவரியைவிட, அங்கஜன் என்ற தனது சுய அடையாளத்தை முதன்மைப்படுத்தி பொதுஜன பெரமுனவுக்கு வெற்றி கரமான அரசியல் அந்தஸ்தை அவர் பெற்றுக் கொடுத்துள்ளார். இதற்குக்கைமாறாகஅமைச்சுப்பதவிகிட்டும், அதன் ஊடாக மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்று அங்கஜன் அரசியல் கனவு கண்டிருக்கலாம். ஆனால் அந்தக் கனவு கனவாகவே மிஞ்சியுள்ளது. யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவியே அவரு க்கு வழங்கப்பட்டுள்ளது.

இது பெயரளவிலான ஒரு பதவியே அல்லாமல் அதிகார பலமுள்ள ஒரு பதவியல்ல. ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், துறைசார்ந்த அதிகாரிகள் ஆகியோரின் முடிவுக்கு அமைவாகவே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அதையும்விட வடமாகாணமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத்தலைவராக வடமாகாண ஆளுநர் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருப்பதும் கவனத்திற்கு உரியது.

பதவி வழியாகவும், அதிகார வழியாகவும் ஆளுமையும் செல்வாக்கும் கொண்ட ஆளுநரின் இணைத் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவராகச் செயற்படுபவர்கள் பெரிய அளவில் எதனையும் சாதிக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது. இந்த நிலை யில் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தவர்களும் தேர்தலில் வெற்றியைத் தேடித்தந்தவர்களும் ராஜபக்ச க்களினால் ஏமாற்றப்பட்டிருப்பது தெளிவாகவே தெரிகின்றது.

இதே நிலைமைதான் மலையகக் கட்சிகளுக்கும் நேர்ந்துள்ளன. பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு, அமோகமாக வெற்றி பெற்றவர்கள் அந்தக் கட்சிக் கான அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். ஆனால் அவர்கள் தங்களுக்கு உரிய எதிர்பார்த்த அரசியல் அங்கீகாரத்தை அரசிடமிருந்து பெற முடியவில்லை. அதிகார பலத்தையும் பெறவில்லை. ஏமாற்றத்திற்கே ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

### தேசிய கொடியும் அமைச்சரவை நியமனமும்

பேரின கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தேசிய அரசியலின் முக்கிய தலைவர்களுமாகிய ராஜபக்சக்களும், சஜித் பிரேமதாசாவும் இந்தத் தேர்தலில் தங்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் முஸ்லிம் தரப்பினரை துரும்புகளாக அரசியலில் பயன்படுத்தி இருப்பதையே தேர்தலின் பின்னரான அவர்களின் நடவடிக்கைகள் காட்டுகின்றன. அதேவேளை, ராஜபக்சக்களின் அமோக தேர்தல் வெற்றியானது நாட்டின் ஒற்றை ஆட்சியை ஒற்றைக் கட்சி அரசாங்கமாக நாளடைவில் மாற்றிவிடுவதற்கான வாய்ப்பை ஏற்டுத்தி உள்ளதாகவே தெரிகின்றது.

தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சி அமைத்துள்ள ராஜபக்சக்களின் நடவடிக்கை அல்லது அரசாங்கத்தின் நடவடிக்கை ஒற்றை ஆட்சி முறையையும் கடந்து ஓரின ஒரு கட்சி அரசாங்கமாகக் கொண்டு நடத்துவதற்கான முனைப்புடன் செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதான தோற்றம் வெளிப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவை உருவாக்கப்பட்டு, அமைச்சர்களாகத் தெரிவாகியவர்கள் தமது பதவிப்பிரமாணங்களைச் செய்த வைபவத்தில் பறக்க விடப்பட்டிருந்த தேசிய கொடியில் சிறுபான்மை இனங்களைக் குறிக்கின்ற நிறங்கள் நீக்கப்பட்டிருந்தன.



தேசிய கொடி என்பது அரசியலில் கட்சி பேதங்களைக் கடந்து உலக நாடுகளில் புனிதமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. அது நாட்டு மக்களாலும், அரசியல் தலைவர்கள், அரசியல் வாதிகள் என பலதரப்பட்டவர்களினாலும் மதிக்கப்படுகின்றது. அதற்கு உரிய மரியாதை எல்லா இடத்திலும் எந்த வேளையிலும் வழங்கப்பட வேண்டும் என்பது எழுத்தில் வடிக்கப்படாததும், வாழ்வியல் முறையில் கடைப்பி டிக்கப்படுவதுமான வழக்கமாகும்.

ஆனால் அந்தத் தேசிய கொடியில் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பதவியேற்கின்ற வைபவத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டு நாட்டின் பன்மைத்தன்மை நீக்கப்பட்டிருந்தது. தேசியகொடியில் செய்யப்பட்டிருந்த இந்த மாற்றத்தை அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அதனை அவர்கள் அவதானிக்கத் தவறிவிட்டார்கள் என்று கூற முடியாது.



அந்த வைபவத்தில் பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்தவர்களில் எவருமே அதனைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்று கருதவும் முடியாது. மொத்தத்தில் அரசியல் தேவைக்காக அதிகாரமுள்ள யாரோ அந்த மாற்றத்தைச் செய்திருக்கின்றார்கள். அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் அதனைக் கண்டும் காணாமல் நடந்து கொண்டார்கள் என்றே கருத வேண்டும். அல்லது மேலிடத்தின் சம்மதத்துடன் அல்லது உத்தரவின் கீழ் தேசிய கொடியில் அந்த மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்றே கொள்ள வேண்டும்.

தேசிய கொடியில் மாற்றங்களைச் செய்வதென்பது பாரதூரமான ஒரு விடயமாகும். அரசியலமைப்பில் தேசிய கொடியின் அவசியம், அதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அரசியலமைப்புச் சட்டமே நாட்டில் முதன்மையானது. மதிப்புக்குரியது. போற்றிப் பின்பற்றப்பட வேண்டியது. அத்தகைய தன்மைகளைக் கொண்ட அரசியலமைப்பை மீறும் வகையில் அதனை அதற்கு முரணான வகையில் அதில் குறித்துக் கூறப்பட்டுள்ள தேசிய கொடியில் மாற்றங்கள் செய்வதென்பது அதனை அவமதிக்கின்ற ஒரு காரியமாகும்.

### வருங்காலத்தை எதிர்வு கூறும் நிகழ்வுகள்

அரசியலமைப்பை மீறுபவர்களும், அதனை மதிக்கத் தவறுபவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களாகவே கருதப்படுகின்றனர். அதே வேளை, அரசியலமைப்பை மீறிய வகையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வை அல்லது ஒரு சம்பவத்தைக் கண்டும் காணாமல் இருப்பவர்கள் அதனை அனுமதித்ததாகவே கருத வேண்டி உள்ளது. ஆகவே அரசியலமைப்பை அவர்களும் மீறியவர்களாகவே கருதுவதில் தவறிருக்க முடியாது.

அமைச்சர்கள் பதவியேற்ற வைபவத்தில்தேசிய கொடியில் அரசியலமப்பை மீறும் வகையில்மாற்றங்கள் செய்யபட்டிருந்தது மட்டுமல்லாமல், பாதுகாப்புஅமைச்சு பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதும், அரசியலமைப்பை மீறிய செயலாகவே சுட்டி க்காட்டப்ப ட்டிருக்கின்றது.

அரசியலமைப்பில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் செய்யப்பட்ட வகையில் உருவாக்கப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதி எந்தவொரு அமைச்சுப் பதவியையும் ஏற்க முடியாது. ஏற்கக் கூடாது. அமைச்சுக்களின் கீழ் வருகின்ற திணைக்களங்களை அவர் பொறுப்பேற்கலாம். ஆனால் அமைச்சுக்களைப் பொறுப்பேற்க முடியாது.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும், அமைச்சுப் பொறுப்பை ஏற்கக் கூடாது என்பது அரசியலமைப்பின் விதி. அதனை மீறிய வகையிலேயே புதிய அமைச்சரவையின் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபோது, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பைத் தன்வசம் வைத்துக் கொண்டார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி முப்படைகளின் தளபதி. இது பதவி வழியாக அவருக்கு அளிக்கப்பட்ட உரிமை. உரித்து. முப்படைகளின் தளபதி என்ற காரணத்தைக் காட்டி அல்லது அதனைச் சாட்டாக வைத்து பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை அவர் ஏற்க முடியாது. அதற்கு அரசியலமைப்பில் இடமளிக்கப்படவில்லை. அவர் அமைச்சுப் பொறுப்புக்கள் எதனையும் ஏற்க முடியாது என்று தெளிவாக அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் தேசிய கொடியில் செய்யப்பட்டிருந்த மாற்றங்களும், பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதும். அப்பட்டமான அரசியலமைப்பை மீறிய செயற்பாடுகளாகும். இது புதிய அரசாங்கத்தின் முதலாவது நடவடிக்கையில் ஏற்பட்டிருக்கின்ற முக்கியமானதும் பாரதூரமானதுமான விடயமாகும்.



மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. அதற்கான அங்கீகாரத்தை மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்ததன் மூலம் அளித்திருக்கின்றார்கள் என்பதற்காக அரசியலமைப்பை மீறிச் செயற்படுவது முறையாகாது.

இந்த அரசாங்கத்தின் அடுத்தடுத்த நடவடிக்கைகள், செயற்பாடுகள் எப்படி இருக்கும், என்ன வகையில் அமைந்திருக்கும் என்பதைக் கட்டியம் கூறுகின்ற நிகழ்வுகளாகவே இந்த இரண்டு நிகழ்வுகளையும் இப்போது நோக்க வேண்டி உள்ளது.

• • •

# தேசிய இனங்களை அழிப்பதில் இலங்கையும் இந்தியாவும் கூட்டுச் சேர்ந்துள்ளன

**பெ. மணியரசன்**

இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ.மணியரசன் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.



இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பல இலட்சம் ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்த ராஜபக்ஸ குடும்பத்தினர் பெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மொத்தமாக உள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 145 உறுப்பினர்கள் ராஜபக்ஸவின் கட்சியான பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்கள். 5 உறுப்பினர்கள் அவர்களின் தோழமைக் கட்சியினர். ஆகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவர்களுக்குக் கிடைத்து விட்டது. ராஜபக்ஸவின் சகோதரர் கோத்தபயா ராஜபக்ஸ நாட்டின் அதிபர், மகிந்த ராஜபக்ஸ தலைமை அமைச்சர்,

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த சஜித் பிரேமதாசாவிற்கு 54 இடங்கள் கிடைத்திருக்கின்றன. சம்பந்தர் தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சி 16இலிருந்து 10ஆக சுருங்கி விட்டது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சிக்கு 2 இடங்கள், விக்னேஸ்வரன் கட்சிக்கு அவர் மட்டும் வெற்றி பெற்றிருக்கிறார்.

இந்தத் தேர்தல் தொடர்பாக தமிழர்கள் அஞ்சி அலறுவதற்கு முன்பாக சிங்களவர்கள் அஞ்சி அலறுகிறார்கள். சிறிசேன அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, மூன்றில் இரண்டு பெரும்பான்மை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை வரலாற்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எந்தக் கட்சிக்குக் கிடைக்கிறதோ அது அரசியலமைப்பை சிதைக்கிறது, சின்னாபின்னமாக்குகிறது, உரிமைகளைப் பறிக்கிறது, பெரும் பாதிப்புகளை உண்டாக்குகிறது என்பது தான் வரலாறு என்று கூறுகிறார். 1956இல் S.W.R.D.பண்டாரநாயக்காவிற்கு மூன்றில் இரண்டு பங்கு கிடைத்தது. 1977இல் மூன்றில் இரண்டுபங்கு, அதேபோல் 2010இல் மூன்றில் இரண்டு பங்கு. இப்படிக் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் அப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர் மேலும் கூறுகையில், சிறிசேன அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய 19ஆவது திருத்தச் சட்டம், இது குடியரசுத் தலைவருக்குரிய அதிகாரத்தை மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத்திற்கு அதிகாரத்தைக் கொடுக்கும் சட்டத் திருத்தம். இதற்கு ஆபத்து இருப்பதாக மங்கள சமரவீரவும், மற்றவர்களும் கூறுகிறார்கள்.

மேலும் இலங்கையில் பிரபலமான பேராசிரியர் ஹர்ஸன ரம்புக்வெல கூறும் போது, ராஜபக்ஸ குடும்ப வெற்றியினால் ஜனநாயக வாய்ப்புக்கள் சுருங்கும். உரிமைகள் சுருங்கும், அரசியல் லாப மடையக் கூடிய கும்பல்கள் அதிகமாகப் பலனடையும். ஜனநாயகத்திற்கு ஆபத்து என்று கூறியிருக்கின்றார்.

ராஜபக்ஸ குடும்பத்தைச் சேர்ந்த பஸில் ராஜபக்ஸ தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்பாக பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி த இந்து நாளிதழின் ஆங்கில நாளேட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவரே இந்த தேர்தலிற்கான வியூகத்தை வகுத்தவர். தேர்தல் உத்திகளை இயக்கியவர் பசில் ராஜபக்ஸ. அவர் கூறும் போது, எங்களுக்கு அதிகாரம் கிடைத்தால், இந்திய இலங்கை உடன் படிக்கையில் மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை தூக்கி எறிந்து விடுவோம். மற்றும் சிறிசேன அரசாங்கம் ஏற்படுத்திய ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் அதிபராக முடியாது என்ற 19ஆவது திருத்தம் ஆகியவற்றை தூக்கி எறிந்து விடுவோம். அரசமைப்பு சட்டத்தை முற்றிலுமாக மாற்றியமைப்போம். எவ்வாறாயின், சீன கம்யூனிஸ் கட்சி ஆட்சி நடத்துகின்ற பாணியில், பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி நடத்துகின்ற பாணியில் மாற்றியமைப்போம். சீனாவில் ஒற்றையாட்சி, இங்கு இந்தியாவில் பாஜக ஆரியத்துவ ஒற்றையாட்சியை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது.

இதே ஆட்சி நடைபெற்றால் மாநிலங்களுக்கு இருக்கும் கொஞ்ச அதிகாரமும் இல்லாமல் போகும். கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை திணித்து தமிழர் மாகாணம் என்ற நிலையையே மாற்றி விட்டார்கள். அந்த நிலைமையை வடக்கு மாகாணத்திற்குக் கொண்டு வருவார்கள். பெரிய ளவில் தமிழின ஒடுக்கு முறை இருக்கும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர் மாநிலமாக இல்லாத ஒரு சூழல் வரும். கோத்தபயா ஆட்சியில் என்ன நடக்கின்றது என்று 10 பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புகள் அறிக்கை வெளியிட்டுள்ளன. இலங்கையில் இப்போது மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன. நபர்கள் குறி வைத்து தாக்கப்படுகின்றனர். சிறையில் அடைக்கப்படுகின்றனர். வழகறிஞர்கள் மிரட்டப்படுகின்றார்கள். தாக்கப்படுகின்றார்கள். ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றார்கள் என்று அனைத்துலக மனித உரிமைகள் அமைப்பு உட்பட பத்து அமைப்புகள் ஐ.நாவிற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் தெரிவித்திருக்கின்றன.

ஈழத் தமிழர்களுக்கு என்ன நடக்கும் என்பதை ஈழத் தமிழர்களும், தமிழ்நாட்டு தமிழர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். மகிந்த ராஜபக்ஸ வெற்றிபெற்றதும், முதன்முதலில் முந்திக்கொண்டு



தொலைபேசியில் வாழ்த்துச் சொன்னவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி. ஏனெனில் அதிக நெருக்கம். இலட்சிய, தத்துவ ஒற்றுமை. சர்வாதிகார சிந்தனையில், தேசிய இனங்களை அழிப்பதில் ஒற்றுமை. அவரும் சேர்ந்து செயற்படுவோம் என்று பதில் அனுப்பியுள்ளார். இருவரும் சேர்ந்து இந்தப் பகுதியிலே ஒற்றுமையான சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவார்கள். இலங்கையில் பௌத்த சிங்கள இனவாத சர்வாதிகார மையம் ஒற்றை ஆட்சிக்கு இந்தியாவில் ஆரிய, பிராமண ஒற்றையாட்சி முறைக்கு செயற்படுவார்கள். அவர்கள் சிங்கள பௌத்த மதத்தை எல்லோரும் அனுசரிக்க வேண்டிய மதமாக ஆக்குவார்கள்.

ஆனால் ஈழத்தில் இந்து ஆலயங்கள் தாக்கப்படும் போது இந்திய இந்துத்துவம் கேட்கவில்லை. அது ஆரியத்திற்கு கீழ்ப்படிய வேண்டிய இந்து. ஆட்சியில் உள்ள எவரும் கேட்கவில்லை. சிங்கள பௌத்தர்கள் அழித்தால் வாழ்த்துச் சொல்லும் இந்துத்துவம் தான் இங்கு இருக்கின்றது. ஈழத் தமிழ் இந்துவிற்கு உள்ள நிலைமையே தான் தமிழ் நாட்டு தமிழ் இந்துவிற்கும். ஆரிய இந்து வேறு. தமிழ் இந்து வேறு. தமிழ் இந்துக்களையும், தமிழர்களையும், தமிழ் மொழியையும், தமிழ் நாட்டு அதிகாரங்களையும் பறிப்பார்கள். அதே போல் ஈழத்திலும் நடக்கும். இதை அறிந்துகொள்ள வேண்டும். இதை எதிர்கொள்வதற்கு நம்முடைய மக்கள், இளைஞர்கள், படித்தவர்கள், பிள்ளைகள் சிந்தித்து நமக்குள் ஒற்றுமையை உண்டாக்க வேண்டும்.

எனது வேண்டுகோள். சம்பந்தர் வெற்றி பெற்று அவரின் கட்சி தோற்றுப் போனது தவறல்ல. அது துரோகக் கட்சி. மக்களுக்கு அறிமுகமானது என்பதால் மீண்டும் மீண்டும் அதற்கு



வாக்களிக்கின்றனர். இதை மாற்றுவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும், முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களும் மனந்திறந்து பேசி ஒரு கூட்டமைப்பை உருவாக்குங்கள். உங்கள் இருவருக்கும் நல்ல கொள்கை இருக்கிறது பாராட்டுக்கள். மக்களிடம் செல்லுங்கள். இளைஞர்களை களத்திற்கு அனுப்புங்கள். திட்டமிட்டு பணி யாற்றுங்கள். மீண்டும் ஆயுதப் போரா ட்டம் அல்ல. மக்களை ஒரு புதிய தமிழ்த் தேசியத்திற்கு உட்படுத்துவது. ஒரு சிங்கள பேரினவாதம் மறுபடியும் நாடாளுமன்றம் வழியிலே வருகின்றது. அதை எதிர்கொள்வதற்கு, வடக்கு கிழக்கு மாநிலங்களை இருக்கின்ற அளவிற்கு பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த விழிப்புணர்ச்சியை உருவாக்குங்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும், விக்னேஸ்வரன் அவர்களும் சிந்திக்க வேண்டியது என்னவென்றால், ராஜபக்ஸ குடும்பத்திற்கு சிங்களவர்கள் மத்தியில் எதிர்ப்பு வருகின்றது. ஜனநாயக உரிமைப் பறிப்பு, மற்றய கட்சிகளை ஒடுக்கி நசுக்குவது. சீன கம்யூனிஸ்ட் கட்சி போல, பாஜக போல ஆட்சியை கொண்டு வந்தால், சஜித் பிரேமதாசாவின் கட்சிக்குக்கூட வாய்ப்புக் கொடுக்க மாட்டார்கள். சிங்களவர்களுக்கும் ஜனநாயக உரிமை பறிக்கப்படும். அவர்களும் கொதித்து எழுவார்கள். அவர்களோடு பேசி இணக்கம் காணுங்கள். இலங்கைக்கு குறைந்தது ஒரு கூட்டாட்சி வேண்டும் என்பதை பேசுங்கள். ஜனநாயக உரிமைகள் ஒரு கூட்டாட்சி இரண்டும் வேண்டும் என்று பேசுங்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், விக்னேஸ்வரனும் இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குங்கள். ஜனநாயக மீட்பு இயக்கம் உருவாகும். அவர்களுடன் ஒரு கூட்டாட்சி முறைக்கு பேசி களம் இறங்குங்கள். முதலில் வடக்கு கிழக்கு மாணங்களில் தமிழர்களுக்குரிய ஒற்றை அமைப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலமும்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நோர்வேயின் பூர்வீகக் குடிகளை அழித்தொழிக்கும் பசுமைக் காலனீயம்



**பகுதி 02**

காலநிலை மாற்றத்தைப் பொறுத்தவரையில் நீடித்து நிலைக்கக்கூடிய எதிர்காலத்துக்கான தீர்வாக, காற்று வலுவே ஐரோப்பா முழுவதும் முன்வைக்கப்படுகின்றது. புதிய ஐரோப்பிய பசுமை ஒப்பந்தம் போன்ற கொள்கைவழித் திட்டங்கள் மூலம் பல அரசுகள் வரியைக் குறைக்கின்றன, மானியங்களை வழங்குகின்றன, புதுப்பிக்கக்கூடிய சக்தியின் உற்பத்தியை முன்னகர்த்துவதற்காக சட்ட ஒழுங்குகளை தளர்த்தி விடுகின்றன.

ஒய்பியெல்ல காற்றாலையைச் சூழவுள்ள முரண்பாடுகள், எவ்வாறு அப்படிப்பட்ட கொள்கைகள், பூர்வீகக் குடிகள் வாழும் பிரதேச ங்கள் மேல் பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் மற்றும் அழிப்புக்கள் தொடர்பான ஐரோப்பாவின் நீண்ட பாரம்பரியங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட செயற்றிட்டங்களை 'பசுமைக் காலனீயம்' என்று சாமி இனத்தைச் சேர்ந்தவர்கள் கருதுகிறார்கள்.

சுற்றுச்சூழல் தொடர்பாக மிகவும் காத்திரமாகப் போராடுகின்ற இயக்கங்கள் பல இவ்விடயங்கள் தொடர்பாக அமைதி காப்பது கவலை தரும் விடயமாகும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வளங்களைப் பிரித்தெடுத்தல் என்ற பெயரில் பூர்வீகக் குடிகளையும் அவர்களது நிலங்களையும் ஆக்கிரமிப்பதற்கு இந்த இயக்கங் கள் மௌனமாக ஒத்தாசை வழங்குகின்றன.

பூர்வீகக் குடிகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் விசேட தூதுவர், சப்மி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புகளுக்கு எதிரான சாமி இன மக்களின் போராட்டங்களைக் கோடிட்டுக் காட்டும் ஒரு மிகவும் காத்திரமான அறிக்கையை வெளியிட்டார். ஆய்வாளர்கள், சாமி அரசியல்வாதிகள் 'சப்மியைப் பாதுகாருங்கள்' போன்ற அமைப்புக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி, சாமி இனமக்களின் பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்படும் தொழிற்றுறை சார்ந்த அபிவிருத்திகள் ஏற்படுத்தும் மிகப்பாதகமான விளைவுகள் தொடர்பாக எச்சரிக்கையை விடுத்ததோடு, தொடர்ச்சியாக மீறப்படும் சாமி இனக்குழுமத்தின் உரிமைகளை மதிக்குமாறு அவர் அறிக்கையின் மூலமாகக் கோரிக்கை விடுத்தார்.

ஏற்கனவே மேற்கொள்ளப்படும் எல்லா விதமான உட்கட்டுமானங்களை விடவும் மேலதிகமாக இன்னும் அதிகமான அறைகள், சுரங்கங்கள், சக்தி நிலையங்கள் என்பன இப்பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. "இங்க கொஞ்சம் அங்க கொஞ்சம் என்று அவர்கள் சொன்னாலும் மொத்தத்தில் இக்கட்டுமானங்கள் மிகவும் அதிகமானவையாகும்" என்று ஜில்லென் நியார்க்க குழுமத்தைச் சேர்ந்த 28 வயதான பேர் மாட்டின் கப்-பியெல் என்ற மேய்ப்பர் தெரிவித்தார். இப்படிப்பட்ட நில அத்துமீறல்களின் காரணமாக சாமி இனமக்களின் நிலங்கள் அங்கு வாழுகின்ற மேய்ப்பர்களுக்கும் கலைமான்களுக்கும் நெருக்கீட்டை ஏற்படுத்தக்கூடிய பிரதேசங்களாக மாற்றப்படுகின்றன.

துரதிட்டவசமாக, ஒய்பியெல்லவுக்குத் தெற்காக 300 கிலோ மீற்றர் தொலைவில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரியபோசன் காற்று வலுப் பிரதேசத்தைப் பார்க்கும் போது, நீதியைத் தேடி நீதிமன்றுகளை நாடும் செயற் பாடு ஜில்லென் நியார்க்க குழுமத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவிதமான பயனையும் தரப்போவதில்லை என்பது தெளிவாகின்றது.

தமிழில் **ஜெயந்திரன்**



போசன் குடாநாட்டில் அமைந்துள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய தரைசார்ந்த காற்று வலுத் தொகுதியான 'போசன் விண்ட்' என்ற அபிவிருத்தியாளர்களுக்கு எதிராக 'போவ்சன் நியார்க்க' குழுமத்தைச் சேர்ந்த சாமி இனத்து கலைமான் மேய்ப்பர்கள் சட்ட நடவடிக்கையை எடுத்திருந்தார்கள்.

தாங்கள் பூர்வீகமாகச் செய்துவரும் கலைமான் மேய்ப்புத் தொழிலை எதிர்காலத்தில் தொடர்ந்து செய்யும் உரிமையை அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டட நிர்மாணங்கள் மீறுகின்றன என்று அந்தக் கலைமான் மேய்ப்பர்கள் வாதிட்டார்கள்.



மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணங்களின் காரணமாக சாமி இனக்குழுமத்தின் குளிர்கால மேய்ப்பு நிலங்களின் மூன்றிலொரு பகுதி அழிக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஜூன் மாதத்தின் ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்ட நோர்வேயின் துரொண்ட்ஹைம் நகரில் அமைந்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், நட்டஈட்டுத் தொகையாக 89 மில்லியன் குரோனர்கள் (9.4 மில்லியன் டொலர்கள்) செலுத்தப்படவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியது.

சாமி இனத்தவரின் பண்பாடு தொடர்ந்து நிலைப்பதை உறுதிப்படுத்துவதற்கு காற்றுவலுத் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதை நிரூபிப்பது மிகவும் கடினமான விடயம் என்பதை மேற்படி தீர்ப்பு சுட்டிக் காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட ஐயத்தின் அடிப்படையில் பண வடிவில் கொடுக்கப்படும் நட்ட ஈடுகள் கலைமான் கூட்டங்களைப் பாதுகாக்கும் என்பதுடன் பன்னாட்டுச் சட்டம் மீறப்படுவதையும் தடுத்து நிறுத்துகிறது என்று மேற்கூறிய தீர்ப்பு எடுத்துக் காட்டுகிறது. இது எவ்வாறிருப்பினும், சாமி இனத்தவர் தாம் இழக்கின்ற மேய்ச்சல் நிலங்களுக்கு ஈடாக குளிர்காலத்தில் தங்கள் கலைமான் கூட்டங்களுக்கு உணவாகக் கொடுப்பதற்கு குறுங்காலத்துக்குரியதும் மற்றும் அதிக செலவினத்தை ஏற்படுத்தக்கூடியதுமான செயற்கை உணவுவகைகளின் இறக்குமதியில் தங்கியிருத்தல் போன்ற தீர்வுகளை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நீதிமன்றத்தின் தீர்ப்பு அனுமானிக்கிறது.



இதன் விளைவாக, ஒன்றில் இந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது கலைமான்களை மேய்க்கும் தொழிலை முற்று முழுதாகக் கைவிட வேண்டும் என்ற இரண்டு தெரிவுகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்ய, நீதிமன்று இந்த சாமி இனத்தவர்களை நிர்ப்பந்திக்கிறது.

"நோர்வீஜிய சட்டத்தில் உள்ள மனித உரிமைச் சாசனங்கள் எவையும் சாமி இனத்தவராகிய எங்களைப் பாதுகாப்பதில்லை என்ற முடிவுக்கு நாங்கள் வரவேண்டியிருக்கிறது" என்று போசனில் இருக்கின்ற பாதிக்கப்பட்ட சாமி இனக் குழுமத்தைச் சேர்ந்த அர்விட் ஜாமா என்ற கலைமான் மேய்ப்பர் எங்களிடம் தெரிவித்தார்.

காற்றாலைச் செயற்பாடுகளை நிறுத்துவதைத் தவிர்த்து இந்த சமூகத்துக்கு நட்டஈடுகளை வழங்குவதன் மூலம், சாமி இனத்தவரின் வாழ்க்கை முறைக்கு நீதிமன்று ஒரு பணப் பெறுமதியைக் கொடுத்திருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதானால், அபிவிருத்தி மற்றும் வளங்களைப் பிரித்தெடுத்தல் என்ற பெயரில் நோர்வீஜிய அரசிலும் காற்றாலைத் தொழிற் றுறைகளிலும் காணப்படும் பூர்வீகக்குடிகளின் உரிமைகளை 'விற்கும்' மனப்பாங்கை இது உறுதிப்படுத்தியிருக்கிறது.

"கலைமான்களை மேய்ப்பதென்பது ஒரு தொழிலல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. அது எங்கள் பண்பாட்டுப் பாரம்பரியம், எங்களது குடும்பம், எமது அடையாளம், நிலத்துக்கும் எமக்கும் இடையே இருக்கின்ற தொடர்பு" என்று நோர்வே சாமிப் பாராளுமன்றின் ஆளும் சபையைச் சேர்ந்த சீல்யா கரினா முஓட்கா தீர்ப்புக்குப் பின்னர் தெரிவித்தார். "ஒரு பிள்ளையை வளர்ப்பதற்கு ஒரு கிராமம் தேவை" என்று சாமி மொழியில் ஒரு கூற்று இருக்கிறது.

**தொடரும்....**

**நன்றி – *Aljazeera***

# சீனாவின் நிலை மாற்றமும் இந்தியாவின் தடுமாற்றமும்

அமெரிக்கா ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை அதிகரிக்க முயல்கின்றது. அதை எதிர்கொள்ள சீனா தனது படைவலுவை பெருக்குகின்றது. அமெரிக்காவின் தொடர்ச்சியான படைத்துறை வளர்ச்சியால் சீனாவும் தனது படைவலுவைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றது. சீனாவின் படைவலுப் பெருக்கத்தை சமாளிக்க இந்தியா தனது படைவலுவைப் பெருக்குகின்றது. இந்தியாவை எதிர்கொள்ள பாகிஸ்தானும் தனது படைவலுவைப் பெருக்கிக் கொண்டே இருக்கின்றது. இந்த நான்கு முனைப் படைக்கலப் பெருக்கப் போட்டி ஒரு சுற்றியக்கமாக தொடர்கின்றது.

### பாக் சீனா இணைந்து இந்தியாவைத் தாக்கலாம்

சீனாவினது படைவலுவிற்கும் இந்தியாவினது படைவலுவிற்கும் இடையில் உள்ள இடைவெளியும், இந்திய பாகிஸ்தான் படைவலு இடைவெளியும் ஆசியப் பிராந்தியத்தின் உறுதி நிலையை முடிவு செய்யப் போகின்றவையாக இருக்கின்றன. இந்தியாவின் படைவலுப் பெருக்கமும் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு படைக்கலன்




களை வழங்குவதில் காட்டும் தயக்கமும் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர் மாறவிருக்கும் அமெரிக்க பாகிஸ்தானிய உறவும் பாகிஸ்தானை சீனாவின் பக்கம் நெருங்கிச் செல்ல வைக்கின்றது. இந்த நிலையில் 2019 ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தான் வசமுள்ள கஷ்மீர் பகுதியும் சீனா வசமுள்ள கஷ்மீரும் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இந்திய நாடாளுமன்றத்தில் முழங்கினார்.

அத்துடன் முழு கஷ்மீரையும் கைப்பற்றுவோம் என்ற முழக்கமும் இந்தியாவில் இருந்து ஒலித்தது. சீனாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான 62 பில்லியன் டொலர் பெறுமதியான பொருளாதாரப் பாதைத் திட்டம் பாகிஸ்தான் வசமுள்ள கஷ்மீர் ஊடாகச் செல்கின்றது. இதனால் இரு நாடுகளும் சுதாகரித்துக் கொண்டன. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் நெருக்கமடைந்தது. இந்தியா இனி பாகிஸ்தானுடன் மோதினால் சீனா இந்தியா மீது போர் தொடுக்கும் என்பதும் இந்திய சீனப் போர் ஒன்று நடந்தால் அதில் இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் களமிறங்கும் என்பதும் இப்போது நடக்கக் கூடிய ஒன்றாகி விட்டது.

சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து இந்தியாவுடன் போர் செய்தால் இந்தியா தனது கட்டுப்பாட்டில் இருக்கும் கஷ்மீரை இழப்பதுடன் இந்தியாவின் ஏழு வட கிழக்கு மாநிலங்களில் பலவற்றை சீனா கைப்பற்றுவதும் சாத்தியமானதாகியுள்ளது. இதனால் இந்தியாவிற்கு ஒரு காத்திரமான நட்பு ஒன்று அவசியம் தேவைப்படுகின்றது.

### குவாட் கூட்டமைப்பு

குவாட் என்ற நான்கு நாடுகளின் கூட்டுறவிற்கான முன்னோடியாக சுனாமி நிவாரணப்பணி அமைந்தாலும் அது ஒரு நிரந்தரக் கூட்டுறவாக அமைக்கும் முன்மொழிவை 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தியப் பாராளுமன்றத்தில் ஜப்பானியத் தலைமை அமைச்சர் சின்சே அபே ஆற்றிய உரையில் செய்தார். இரு மாகடல்களின் சங்கமம் என்னும் தலைப்பில் உரையாற்றிய அபே. இந்துமாகடலையும் பசுபிக் மாகடலையும் ஒன்றிணைத்து கொள்கை வகுப்பதை வலியுறுத்தியிருந்தார்.




**வேல் தர்மா**

இந்தியப் பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றிபத்துஆண்டுகள்கழித்துஅமெரிக்காமீண்டும் அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளிடையேயான ஒத்துழைப்பை முன்வைத்தது. அமெரிக்கா அதற்கு (நான்கு முனை பாதுகாப்பு பேச்சுவார்த்தை (Quadrilateral Security Dialogue) என அழைத்தது. அது சுருக்கமாக குவாட் (Quad) என அழைக்கப்பட்டது. இது ஒரு நான்கு நாடுகள் இணைந்த பொறிமுறையாகும் எனவும் சொல்லப்பட்டது. இதன் உள்நோக்கம் சீனாவின் கடல்சார் விரிவாக்கத்தை தடுப்பதாகும்.

### இந்தியத் தடுமாற்றம்

குவாட் கூட்டமைப்பில் இணைவதற்கு இந்தியா ஆரம்பத்தில் தயக்கம் காட்டியது. 2016 ஜூன் மாதம் பூட்டானின் டொக்லம் பகுதியில் நடந்த இந்திய சீன முறுகலுக்குப் பின்னர் இந்தியாவில் பல தரப்பினரிடமிருந்தும் இந்திய சீனாவிற்கு எதிராக குவாட் கூட்டமைப்பில் இணைய வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. 2018 ஏப்ரலில் நரேந்திர மோடியை சீனாவிற்கு அழைத்த ஜி ஜின்பிங் வுஹான் நகரத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார். சீனாவிற்கு எதிரான கூட்டணியில் இந்தியா இணையக் கூடாது என மோடி மீது கடும் அழுத்தம் அங்கு செய்யப்பட்டது.

2019இல் தேர்தலை எதிர் கொண்டிருந்த மோடிக்கு சீனா இந்திய எல்லையில் செய்யும் காத்திரமான ஒரு அத்துமீறல் தன் தேர்தல் வெற்றியைப் பாதிக்கும் என்பதால் அடக்கிப் போனார். அதன் பின்னர் 2019 ஒக்டோபரில் நடந்த மோடி ஜீ ஜின்பிங் சந்திப்பில் சீன அதிபரை மகிழ்ச்சிப் படுத்தும் செய்கைகள் பலவற்றை மோடி செய்தார். பல்லா யிரக் கணக்கான இந்தியர்கள் ஜின்பிங்கின் படம் பொறித்த முகமூடியுடன் நின்று அவரை வரவேற்றனர். ஆனால் ஜின்பிங் அதற்கெல்லாம் மசியவில்லை என்பதை 2020 ஜூலையில் சீனா லடாக் பிரதேசத்தில் செய்த அத்து மீறல் காட்டியது.

### ரஃபேல் மிகைப்படுத்தல்



லடாக் மோதலின் பின்னர் இந்தியா பிரான்சிடமிருந்து ரஃபேல் விமானங்கள் வாங்குவதை துரிதப் படுத்தியது. அத்துடன் ரஃபேல் போர் விமானங்களால் சீனாவிற்கும் பாகிஸ்தானுக்கும் பெரும் அச்சுறுத்தல் என இந்திய ஊடகங்கள் மிகைப்படுத்தி செய்திகள் வெளியிட்டன. மூவாயிரம் போர் விமானங்களை வைத்திருக்கும் சீனாவையும் ஆயிரம் விமானங்களை வைத்திருக்கும் பாகிஸ்தானையும் இரண்டாயிரம் போர் விமானங்களை வைத்திருக்கும் இந்தியா எதிர் கொள்வது மிகவும் சிரமமான காரியம். அதனால் இந்தியாவிற்கு பனிப்போர்க் காலத்தில் ஒரு வல்லரசு நாட்டுடன் கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்று அவசியமாகியுள்ளது.

### அடக்க முயலும் அமெரிக்கா அடங்க மறுக்கும் சீனா

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உலக ஆதிக்கத்திற்கும் பொருளாதார மேம்பாட்டிற்குமான போட்டி தற்போது ஒரு பிரச்சனைக்குரிய நிலையை அடைந்துள்ளது. இரண்டு நாடுகளும் அரசுறவியலாளர்கள்மூலம் கூடிப் பேசுவதை இப்போது குறைத்துக் கொண்டிருக்கின்றன. பொருளா தாரம், தொழில்நுட்பம், படைத்துறை ஆகியவற்றில் வேகமாக முன்னேறி வரும் சீனாவை அடக்காவிடில், அமெரிக்கா தனது உலக ஆதிக்கத்தை இழக்க வேண்டி வரும். இதனால் அமெரிக்காவிற்கு குவாட் அவசியமான ஒன்றாகும். பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் வளர்வதை விரும்பாத அவுஸ்திரேலியா தற்போது மற்ற நாடுகளிலும் பார்க்க குவாட் மீது அதிக அக்கறை காட்டுகின்றது.

2020 பெப்ரவரியில் குவாட் கூட்டமைப்பில் இணைவதற்கு வியட்நாம், தென் கொரியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் தெரிவித்த விருப்பத்தை இந்தியா ஏற்றுக் கொண்டதை இந்தியா சீனாவிற்கு எதிரான நிலைப்பாட்டை கடுமையாக்குவதாகப் பார்க்கப்பட்டது. ஆனால் இந்தியா தான் சீனாவுடன் செய்து கொண்டிருக்கும் பலபக்க கையாளுதலைத் (multilateral engagement) தொடரப் போவதாக அறிவித்தது. இது அமெரிக்காவின் சீனாவை தனிமைப்படுத்தும் கொள் கையுடன் ஒத்துப் போவதாக இல்லை. இந்தியா சீனா தொடர்பாக ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க முடியாமைக்கு காரணம் இந்திய சீன வர்த்தகத்தில் இந்திய ஆளும் கட்சிக்கு நிதி உதவி செய்யும் பல முதலாளிகள் பெரும் இலாபமீட்டுகின்றார்கள்.

• • •



# இயற்கை விவசாய முறையில் நுண்ணுயிர்களின் பயன்பாடு

பேராசிரியர் **மிகுந்தன்** விவசாய நுண்ணுயிரியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

எமது நிலைத்த விவசாய மேம்பாட்டிற்கும், வளமான வாழ்வுக்கும் இயற்கை விவசாய முறைகளில் இயற்கையோடொன்றிய நவீன தொழில்நுட்ப பொறிமுறைகளை உள்வாங்குவது அவசியமாகிறது. இதற்காக அசேதன இரசாயனப் பசளைக்கும், பீடை கொல்லிகளுக்கும், விளைவு பெருக்கிகளுக்கும் மாற்று வழி கண்டறியப்படல் வேண்டும். எமது நாட்டுக்கே உரித்தான மாற்று வழிகளாகஅவை இருக்க வேண்டுமேதவிர, எமக்கு ஒவ்வாத முறைகளை இங்கு அறிமுகப்படுத்துவது நீண்ட காலப் போக்கில் அது எதிர்பார்த்த நன்மை களைத் தராது. மாறாக எமது இயற்கையை நாம் அவதானமாக கவனித்தால், எமக்கான விடை இங்கே கிடைக்கும். தற்போதெல்லாம் பலர் அசேதன இரசாய னங்களைப் பாவிப்பதில் கவலை கொள்வதனையும், அதற்கு மாற்று வழிகளை தேடு வதனையும் அறிய முடிகின்றது. அதற்கான பரிந்து ரைகளை நாம் வழங்கத் தயாரானால், எமது மக்களி டையே ஏற்படும் இவ்வகையான மாற்றங்களுக்கு நாம் விரைந்து உதவிட முடியும். இதில் எம் அனை வருக்கும் பங்குண்டு என்பதனையும் நாம் மறந்து விடக் கூடாது.

எமது சூழலை நாம் இன்னும் முற்றாக அறியவில்லையென்பது ஏற்றுக்கொள்ள வேண் டிய ஒன்றாகவே உள்ளது. நீண்ட நாட்க ளாகவே எமக்குள்ளேயெழுந்த வினாவுக்கு மாணவர்களின் ஆராய்ச்சி மூலம் விடை கிடைத்துள்ளது. யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல் துறையில் இறுதியாண்டு மாணவி ஒருவர் மூன்றா ண்டுகளுக்கு முன்னர் செய்த ஆய்வில், பனை மரங்களில் வளரும் ஒருவகை தாவரத்தின் விருத் திக்கு உதவும் வேர்ப்பூஞ்சணங்கள் பற்றி ஆராய்ந் துள்ளார். பனை மரத்தில் வன்டா எனப்படும் ஒரு வகை ஓர்க்கிட் தாவரம் ஆங்காங்கே வளர்ந்திருப் பதை காணலாம். இந்த தாவரத்தின் வளர்ச்சியி னால் பனைமரத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஒட்டி வளரும் இவ்வகைத் தாவரத் தினை நாம் பெரிதாக கண்டு கொள்வதில் லை.




வன்டாவின் வேர்களை உற்று நோக்கி னால், அதனது வேர் ஸ்பொன்ஜ் *(sponge)* போல ஊதி பெருத்திருக்கும். இந்த வேர்களில் பலவகை பூஞ்சணங்கள் ஒத்தியைந்து வளருகின்றன. வளியிலு ள்ள ஈரப்பத னை, ஊட்டச் சத்தை உறிஞ்சியெடுக்கும் தன்மை இந்த ஓர்க்கிட் - பூஞ்சண உறவுக்கிருக்கி ன்றது. இவ்வாறான பூஞ்சணங்கள் ஒருவகை மைக்கோரைசா *(Mycorrhiza)* என அழைக்கப்படும். இவ்வாறான மைக்கோரைசாக்கள் வேருடன் இணை ந்து தேவையான ஊட்டச்சத்தினை பெற் றுக் கொடுக்கும் வல்லமையுடையன. இந்த மைக் கோரைசாக்களை ஆய்வில் பிரித்தெடுத்திருக்கின் றோம் என்பது நல்ல செய்தியாகும். மைக்கோரைசா பூஞ்சணங்களை ஏனைய தாவரங்களின் வேர்த் தொகுதியில் ஒத்த தன்மையுடையதாக தொற்று ஏற்படுத்தி விட்டால், தாவரத்திற்கேற்ற ஊட்டச் சத்தினை அவை இலகுவாக ஏற்படுத்திக் கொடு த்து விடுவதோடு, வேர்த்தொகுதியின் பாதுகாப் பிற்கும் அனுசரணையாக இருக்கும். மண்ணின்றி தாவரங்களை வளர்க்கும் *(Soil less culrure)* கலையில் இன்னும் இதுபோன்ற ஆய்வினை முன்னெடுத்தால், பூ வளர்ப்பு கலையினை பனை மரங்களில் சிறப்பாக முன்னெடுக்க ஏதுவாயு மிருக்கும். பனை மரத்தில் ஏனைய ஓர்க்கிட்டு களையும் வளர்த்து அதனை ஒரு வருமானந்தரும் தொழிற்றுறையாக மேம்படுத்த முடியும்.

மாற்றுவழிகளில் முக்கிய இடமாக நாம் கவனிக் ககூடியது நுண்ணங்கிகளின் வினைத்திறனான பயன்பாடு தான். மைக்கோரைசா வகைப் பூஞ்சண ங்கள் வழக்கமாக தாவரங்களின் வேர்களில் ஒன்றிய வாழ்வு மூலம் இணைக்கப்பட்டு, தாவரத் திற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை மண்ணி லிருந்து பெறவல்ல வேர்த்தொகுதியினை வழங் கும். இவ்வகையில் இந்த மைக்கோரைசா பூஞ்ச ணங்களை பல்வேறு வகையான தாவரங்களில் தொற்று ஏற்படுத்திப் பார்க்கப்பட்ட போது, அது மிளகாயின் வேர்களோடு சிறப்பாக ஒன்றிணை ந்து காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. அது மாத்திரமல்ல, இப்பூஞ்சணத்தின் ஒன்றிய வாழ்வினால் மிளகாயின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்ததுடன், வேர்த்தொகுதியும் சிறப்பாக வளர் ந்திருந்திருந்தனை காண முடிந்தது. இந்த ஆய்வின் முடிவு பல ஆய்வுகளின் தொடக்கமாகவும், இன் னும் வரட்சியில் துவண்டிருக்கும் எமது பிரதே சத்தில் பயிர்களை வளர்ப்பதற்கு புதிய தொழில் நுட்பத்தை உள்வாங் கவும் வழி செய்திருக்கின்றது. ஒன்றிய வாழ்வில் இருக்கும் இவ்வகை பூஞ்சண த்தின் ஏனைய சிறப்பி யல்புகளையும் கண்டறிந்து அதனை விவசாயிகள் பெறக்கூடியதாக மாற்றிய மைத்தால் நிச்சயமாக நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி நாம் நகரமுடியும் என்னும் நம்பிக்கையும் பிறந்திரு க்கின்றது.

நுண்ணங்கிகளின் உலகத்தினை நாங்கள் உள்ளார்ந்து பார்த்தால், பலவிதமாக விவசாய பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். இந்த நம்பி க்கையில் மேலும் இவ்வாய்வினை விரிவுபடுத்தி விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் இந்த மைக்கோரைசா பூஞ்சணத்தை சிறந்த பெறுமதி வாய்ந்த நுண்ணங்கி ஊக்கியாக வெளிக்கொணர முடியும். அந்த பொன்னான காலத்தை நோக்கி நாம் நகரத்தலைப்பட்டுள்ளோம்.

அவரைப்பயிர் தாவரங்களில் வளிமண் டல நைதரசனை வேர் முடிச்சுக்களாக நிலைநாட் டும் செயற்பாடு பற்றி நாமெல்லோரும் அறிந்திருக் கிறோம். அவ்வாறானதாவரத்திற்கும் றைசோபியம் என்னும் நன்மை தரும் பக்ரீரியாவுக்குமான ஒன்றிய வாழ்க்கையில் பக்ரிரியாவுக்கான இடவசதியையும் தேவையான ஊட்டச்சத்தையும் தாவரம் வழங்கும் போது, தாவரத்திற்கு தேவையான தழைச்சத்தை பக்ரீரியா வளியிலிருந்து நிலைநாட்டி வேர்முடிச்சு க்களில் சேமித்து வைக்கும். இதனை தாவரம் இலகுமுறை தழைச்சத்தாக அகத்துறிஞ்சக் கூடிய தாக இருக்கும். இவ்வாறான பக்ரீரியாவை நாம் செயற்கை முறையில் விருத்தி செய்தால், அதனை பயிர்ச்செய்கை காலத்தில் விதை விதைக்கும் போது சேர்த்து கலந்து விதைப்பதால் வேர் முடிச்சு க்கள் விரைந்துருவாவதை ஊக்குவிக்கலாம். இதனை கண்டியிலுள்ள அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தில் ஆய்வு மூலமாக ஆதாரத்துடன் நிரூபித்திருக்கிறார்கள். இவ்வகையான பக்ரீரியாக் களை செயற்கை முறையில் விருத்தி செய்து அவ ற்றை விவசாயிகள் வாங்கி பயன்படுத்தத்தக்கதாக ஏற்பாடு செய்தல் வேண்டும். இதற்காக தான் தொழிற்சாலைகளின் உதவி தேவைப்படுகின்றது. பாரிய அளவில் உயிர்ப்பசளைகளை உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளை நாம் ஆராயும் அதேவேளையில், அவற்றை விவசாயிகளின் பயன்பாட்டுக்கும் கிடைக்கக் கூடியதாக செய்தல் வேண் டும்.

இவற்றுடன் தாவர வேர்த் தொகுதியில் இருக்கும் நன்மை தரும் பூஞ்சணங்கள் மற்றும் பக்ரீரியாக்களை ஒன்றிணைத்து உயிர்ப்படல நுண் ணங்கிகளை உருவாக்கி, வெற்றியும் கண்டிருக்கி ன்றார்கள். இந்த உயிர் படல நுண்ணங்கிகள் *(Biofilm microorganisms)* தாவ ரத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதோடு அவற்றினது பங்கு பற்றியும் ஆய் வினால் கண்டறிந்திருக்கின்றார்கள். இவ்வாறான நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டை நாம் ஊக்கு விக்க வேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்து




செயலாற்ற வேண்டும். இவ்வாறான நுண்ணுயிர் படலங்கள் நீர்ப்பாசன பொறிமுறைகளூடாக நிலத்திற்கும் பயிர்களுக்கும் கிடைக்க வழிவகை செய் தல் சிக்கனம் வாய்ந்ததாக அறிய ப்படுகிறது. இதற்கான ஏனைய முயற்சிகளை நாம் இனி கவ னத்திற்கெடுத்து எமது தாயகத் திலேயே உயிர்ப் பசளைகள் உற்பத்தியாகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்

விவசாய பெருமக்களிடையே பீடைநா சினி பயன்பாட்டை பயன்படுத்துவதில் கட்டுப் பாடுகளை நாம் போடுவதற்கு முன்னால் மாற்று வழிகள் பலவற்றை பரிந்துரை செய்ய வேண்டி யது மிகவும் அவசியமாகும். இந்தியாவில் தமிழ் நாட்டில் கிராமந்தோறும் உயிர்ப்பசளைகள் மற் றும் உயிர்கொல்லிகள் பலவற்றை வாங்கி பயிர்ச் செய்கையில் பயன்படுத்துவதற்கு முடியும். அவ்வா றான நிலைமையை இங்கும் நாம் உருவாக்க வேண்டியிருக்கின்றது. இதற்கு ஆய்வு ரீதியான பின்புலம் தேவையாயிருப்பதுடன், தரத்தையும் நிர்ணயஞ்செய்ய வேண்டியிருக்கின்றது. இது பற்றி நாம் நிறையவே பேசி விட்டோம். இனி செயலில் காட்டும் நேரம் கனிந்து வந்துகொண்டிருக்கின்றது என கூறலாம். யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் உயிர்கொல்லிகளை உருவாக்குவதற்கான முன் முயற்சிகள் எடுத்து வருகிறது. விவசாய பீடத்தின் ஆய்வுகளில் சேதன விவசாயத்திற்கும், உயிர்ப் பசளைகள் மற்றும் ஒருங்கிணைந்த பீடை முகாமை த்துவத்தின் முக்கியத்திற்கும் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மதிப்பேற்றஞ் செய்து புதிய பொருட் களை கண்டு பிடிக்கும் செயற்பாட்டுக்கு முன்னு ரிமை யளிக்கப்பட வேண்டும்.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் ஆய்வுக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

### உலகத் தமிழினத்தின்... தொடர்ச்சி...

புச் சபையால் தடுக்க முடியாது என்ற உண்மை சிறீலங்காவின் நீதி அமைச்சருக்குத் தெரியாதிருக்க லாம். ஆனால் நீதிக்காகப் போராடும் ஈழத்தமிழர் களுக்கும் உலகத்தமிழினத்திற்கும் நன்கு தெரியும்.

உலக மன்றத்தின் மனித உரிமை ஆணை யகத்தின் பொறுப்புள்ள அதிகாரிகள் அனைவருக் கும் ஈழத்தமிழர்களுக்கு நிகழ்த்தப்பெற்ற இன அழிப்புக்கள் முதல் இன்று வரை தொடரும் மனித உரிமை மீறல்கள் வரை அனைத்தும் சான்றாதா ரங்களுடன் தெரியும் என்பதனாலேயே பொறுப் புக் கூறத் திராணியற்ற சிறீலங்கா, அதன் நல்லி ணக்க பொறுப்புக் கூறல் வழிகாட்டலில் இருந் து விலகியது. இதன் மூலம் சிறீலங்கா தான் நீதியைச் சந்திக்க எந்த அளவுக்கு அஞ்சுகிறது என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்தி விட்டது.

1970களில் பாராளுமன்றத்தில் கூட்டுப் பெரும்பான்மையினால் சிறீலங்கா சுதந்திரக்கட்சி நாட்டைப் பிரித்தானியாவின் மாட்சிமை தங்கிய மகாராணி அவர்களின் வழிகாட்டல் தலைமை யில் இருந்து பிரித்து உலகின்மிக மோசமான மனித உரிமை வன்முறைகளின் களமாக மாற்றியது போலவே 2020 தேர்தலில் கிடைத்துள்ள அதி திப் பெரும்பான்மை மூலம் இன்றைய ஆட்சி யாளர்கள் சிறீலங்காவை உலகில் இருந்து தனிமை ப்படுத்தி, தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் கூட மிகவும் சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த வாழ்வை உருவாக்கப் போகின்றார்கள்.

**கேள்வி:**

**இன்றைய சூழலில் ஈழத்தமிழர் தேசிய பிரச்சினைக்கு தாயக, புலம்பெயர் உறவுகள் வழி எவ்வாறான முயற்சிகளை முன்னெடுக் கலாம்?**

**பதில்:**

புலத்துத் தமிழர்களுக்கு மற்றைய புலம் பெயர்ந்த மக்களுக்கு இல்லாத மிகப்பெரிய இய ல்பு ஒன்று உண்டு. அதாவது பொதுவாகப் புலப் பெயர்வுகளில் புகலிட நாட்டுடனும் தாயகத்துட னும்தான் இருவழித் தொடர்புகள் இருக்கும். ஆனால் ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வில் தாயக - புகலிட - தமிழர் வாழும் உலகநாடுகள்என முப்பரிமாணத் தொடர்பு ஒன்று உண்டு. இது தமிழர்களின் தேசங்கடந்துறை தன்மையின் மிகப்பெரிய ஆற்றல். இந்த ஆற்றலை ஒழுங்கு படுத்தி உலகத் தமிழர்களாக அவரவர் நாட்டின் குடிமக்களாக அந்த அந்த நாட்டின் சட்ட திட்ட ங்களுக்கு அமைவாக வாழுகின்ற அதே நேரத்தில் உலகத் தமிழர்கள் என்ற பலம் பொருந்திய கட் டமைப்பின் கட்டற்ற சக்தி கொண்டு எங்கள் தமிழ் மக்களின் வறுமைக்கும் அறியாமைக்கும் எதிர்வினையை எம்மால் ஆற்றிட முடியும்.

உலகத் தமிழினத்தின் அறிவுப் பலமும் பொருளாதாரப் பலமும் ஈழத்தமிழர்களுடன் என் றும் உள்ள பேராற்றல். ஆகையால் இதனை உணர் ந்து ஈழத்தமிழர்களையும் அவர்களின் தாயக, தேசிய, தன்னாட்சி உரிமைகளையும் இனி யாரா லும் அழிக்க முடியாது என்ற உண்மையின் அடிப் படையில் ஈழத்தமிழர்கள் வாழ வேண்டும். அதற் குப் புலத்துத் தமிழர்கள் ஒற்றுமையுடன் உதவ வேண்டும். உலகத் தமிழினத்தின் இளம் தலை முறையினர் உலகெங்கும் என்றுமில்லாத வாறு ஈழத்தமிழினத்தின் வரலாற்றையும் தேவைகளை யும் அறிவதில் காட்டி வரும் பேரார்வம், தமிழி னத்தன்மை உள்ள வரை உலகத் தமிழினம் ஈழத் தமிழினத்தின் குரலாகத் தொடர்ந்து ஒலிக்கும் என்கிற உறுதியையும் ஏற்படுத்தி வருகிறது.

எனவே ஈழத்தமிழர்கள் இலங்கைக்குள் மட்டும் முடக்கப்படக் கூடிய ஒரு இனம் இல்லை என்பதை உலகுக்கு வெளிப்படுத்தியதே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அளப்பரிய துன்பங்களையும் கடந்த பெருவெற்றி என்பதை யும் இவ்விடத்தில் தெளிவாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

வாழும் நாடுகளில் எல்லாம் ஈழத்தமிழர் களை நன்கறிந்து நிற்கும் உலகிற்கு முன்னால், இனியும் அவர்களின் உரிமைகள் மீட்கும் பணி களைச் சிறீலங்கா பயங்கரவாதம் எனத் திரிபு வாதம் செய்து கொச்சைப்படுத்த முடியாது என்ப தையுத் இவ்விடத்தில் சுட்டிக் காட்டி, ஒரு இனம், ஒரு நாடு, ஒரு மொழிக் கொள்கையைக் கைவிட்டு ஒரு தீவுக்குள் இரு அரசுக்களின் தொன்மையும், தொடர்ச்சியும் கொண்ட மக்கள் காலனித்துவ பிரித்தானிய அரசால் ஒற்றையாட்சிக்குள் உள்ளாக் கப்பட்ட தொடர்ச்சியில் வாழ்கின்றார்கள் என்ப தைச் சிறீலங்கா உணர்ந்து, தமிழர்களின் இனமான த்துடன் அவர் களை வாழவிட்டுச் செயற்பட்டால் அதுவே இலங்கை இவ்வுலகின் சொர்க்கம் என்ற தன் பழைய புகழை மீளவும் புதுப்பிக்கும்.

• • •

### பதின்மூன்றாவது ... தொடர்ச்சி...

காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட மாட்டாது, இலங்கை இந்திய உடன்பாட்டை ஆரம்பத்தி லேயே எதிர்த்தவன் நான். எனவே அதனை முற்றாக செயலிழக்கச் செய்வது நாட்டுக்கு நல்லது. அரசு தனது மூன்றில் இரண்டு பெரும் பான்மையை அதற்கு பயன்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### தேசியப் பட்டியலில் ... தொடர்ச்சி...

முதலமைச்சர் பதவியில் கண் வைப்பார் என்பது அவருக்குத் தெரியும். சி.வி.கே. ஏற்கனவே முதல மைச்சர் கனவில் உள்ளவர். தேசியப்பட்டியல் விவகாரமும் அவரது கனவையும் கலைத்துவிடுமா என்பது அவரது பிரச்சினை. யாழ். மா வட்டக்குழு எடுத்த தீர்மானத்தின் பின் னணியில் இருப்பவரும் அவர்தான். அதேவேளையில், இன்னும் சில வருடங்களுக்கு தலை மைப்பதவியில் மாவை தொடர் ந்தால் தனது மகன் கலையமுதனைத் தலைமைக்குக் கொண்டுவந்து விடுவார் என்ற அச்சம் சிறிதரன், சுமந்திரனுக்குள்ளது. கலையமுதன் அவர்களு டைய கனவைக் கலைத்துவிடலாம். அவர்களின் அவசரத்துக்கு அதுதான் காரணம்!

### சிங்கள பௌத்த ... தொடர்ச்சி...

தேசம் சிங்கள பௌத்த இனத்தவருக்கானது மட் டும் என்பதை சிறீலங்கா அரசு உலகிற்கு தெரிவி க்கும் செயற்பாடு என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### தோல்வியை ஆய்வு ... தொடர்ச்சி...

தார்.

மேலும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நியமன முடிவில் மாற்றம் இல்லை என்று குறிப்பிட்ட அவர், மத்தியகுழு எதிர்வரும் 29ஆம் திகதி வவுனியாவில் கூடவுள் ளதாகவும் அதில் மற்றைய முடிவுகள் எடுக்கப் படும் என்றும் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் பின்னடைவு குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிதற்கு ஐவர் கொண்ட சுயாதீன குழு ஒன்றை அமைப் பது என்று இந்த கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டு ள்ளது.

### சுயேட்சைக் குழுக்களை ... தொடர்ச்சி...

ஆதரவுகள் அதிகம் கிடைத்துள்ளது.

சுயேட்சையாக போட்டியிட்ட பொதுவு டமைக் கட்சி தலைவர் செந்தில்வேல் தொழிலா ளர்கள் மற்றும் சாதி அடிப்படையை தனது பிரச் சாரமாக்கி 5,000 வாக்குகளை பெற்றுள்ளார்.

இவ்வாறானசம்பவங்கள், வடபகுதியில் மக்களின் கவனம் மற்றும் அரசியல் அபிலாசை களில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை காட்டுவதாக அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### தேசிய இனங்களை ...தொடர்ச்சி...

விக்னேஸ்வரனும் இணையுங்கள். யார் யாரை இணைக்க முடியுமோ இணையுங்கள். இந்த திட்டத்தை போர்க்கால வேகத்தில் செய்யுங்கள்.

தமிழ் நாட்டுத் தமிழர்கள் இதை புரிந்து கொண்டு தமிழ்நாட்டில் ஒரு தாயக உரிமைப் பாதுகாப்பு, மொழிப் பாதுகாப்பு, இனப் பாது காப்பு, குடிமை உரிமைப் பாதுகாப்பு என்ற தளத்தில் சிந்திக்க வேண்டும். இதற்கான கொடை தத்துவமாக தமிழ்த் தேசியம் இருக்க வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களும், தமிழீழத் தமிழர்களும் கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள். இல்லையேல் நாங்கள் பாதிக் கப்படுவோம். ஏனெனில், பசில் ராஜபக்ஸவின் கூற்றைப் பார்த்தால் பாஜக ஆட்சி எப்படிப் பட்டது என அவர்களுக்குப் புரிகிறது. இவை எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விழிப்பு ணர்ச்சி பெற்று, நாம் ஒருங்கிணைய வேண்டும். இலங்கை தேர்தல் முடிவுகளிலிருந்து நாம் கற்றுக் கொண்டு செயற்பட வேண்டும். அச்சப்படக் கூடாது. பின்வாங்கக் கூடாது. செயற்பட வேண் டும். தமிழ்த் தேசியப் பேரியக்கம் செயற்களத்தில் உங்களோடு இருக்கும். கைகோர்த்து செயற்படு ங்கள். சிந்தியுங்கள். செயற்களம் வாருங்கள்.

### 19 ஆவது திருத்தச் ... தொடர்ச்சி...

பதவியில் இருந்து அகற்றிய பின்னர் 19 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

### இயற்கை விவசாய ... தொடர்ச்சி...

ளுக்கிணைவாக எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி எமது விவசாயிகளுக்கான பிர ச்சனைகளுக்கு தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இதில் நாமனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் தேவை உணரப்பட வேண்டும். பாரம்பரியமாக செய்ய ப்பட்ட விவசாயத்தின் முக்கியத்துவத்தை பதிவு செய்து அதன் நல்ல விடயங்களை மீண்டும் பரிசீலனை செய்து இயற்கையுடன் இணைந்த பயிர்ச்செய்கை முறைகளை நாமனைவரும் முய ற்சிக்க வேண்டும்.

ஆங்காங்கே விவசாயிகளின் விளைநி லங்களில் விவசாய சங்கங்கள்மூலம் சிறு முயற்சி களை நாம் செய்து பார்த்திருந்தும் அவற்றை முழுவீச்சில் செய்ய வேண்டிய காலத்தை எதிர் பார்த்திருக்கின்றோம். நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தின் உதவி இதற்காக தேவைப்படு கின்றது. இதனை நாம் ஏற்படுத்திக்கொள்ள வழிவகை பிறக்கும் என நம்புகின்றோம். இவ் வகை முயற்சிகளுக்கான அறிவியல், தொழில் நுட்ப, பொருளாதார உதவிகளை உலகெங்கும் பரந்து கிடக்கும் எம் உறவுகள் முன்னுரிமை கொடுத்து வழங்கும் போது சிறு அளவில் ஆரம் பிக்கப்பட்டுள்ள முயற்சிகளை விரிவாக்கவும் எமக்கான தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படு த்தவும் முடியும். அவ்வாறு ஊக்கம் வழங்க முன் வருபவர்களை உரிய செயற்பாட்டு திட்டங்களூ டாக வழிகாட்ட எம்மை போன்றவர்கள் தயா ராக இருக்கிறோம்.